

சிவபுரம் ஜமீன்தார், பா. வே. மாணிக்க நாயகர்,
அவர்கள் பி. இ., ரிட்டையர்ட்
சுப்ரிண்டெண்டிங் இஞ்சினியர், சென்னை.

ஓம்

திருச்சிற்றம்பலம்

# செந்தமிழ்ச் செல்வி

சிலம்பு ௬ } மெய்கண்டான் யாண்டு-௭௱௬ மார்கழித் திங்கள் 1931௵ டிசம்பர்௴—1932௵ ஜனவரி௴ { பரல் ௧௨

திருச்சிற்றம்பலம்

## திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

ஈச னென்னை யறிந்த தறிந்தனன்
ஈசன் சேவடி யேத்தப் பெறுதலால்
ஈசன் சேவடி யேத்தப் பெற்றேனினி
ஈசன் றன்னையும் யான் மறக்கிற்பனே.

பதவுரை:—

*ஈசன் சேவடி*=என்னை ஆளுகின்ற இறைவனுடைய செவ்விதாகிய திருவடிகளை

*ஏத்தப் பெறுதலால்*=நான் வணங்கித் துதிக்கப் பெறுதலால்

*ஈசன்*=அந்த இறைவன்

*என்னை அறிந்தது அறிந்தனன்*=எனக்கு வேறாக நின்று அறிவித்து வருகிறதும் அல்லாமல் என்னை நான் அறியும் வண்ணம் என்னுடன் நின்று எனக்காக அறிந்து வருகிற முறைமையையும் நான் அறிந்துகொண்டேன்.

*ஈசன் தன்னையும எத்தப் பெற்றேன்*=அவ்வாறு காணும் உதவி செய்துவரும் இறைவனை நான் வணங்கித் துதித்து அவனை அறிந்துகொண்ட காரணத்தினால்

*இனி*=இனிமேல்

*ஈசன் தன்னையும்*=இத்துணை உதவி செய்துவந்த அந்த இறைவனை

*யான் மறக்கிற்பனே*=யான் என் உள்ளத்தில் எப்பொழுதும் நினைத்

துக்கொண் டிருப்பனே அல்லாமல் அவனை ஒரு கணமாயினும் மறக்க என்னால் முடியாது.

விளக்கவுரை:—

ஈசன் என்னும் வடமொழிச் சொல் ஆளுதல் என்று பொருள் படும். ஈஷ் என்னும் அடிச்சொல்லிலிருந்து வந்தது. (ईश्-to rule) ஆளுகின்ற ஆண்டவன் என்னும் பொருள்.

சேவடி என்னுஞ் சொல் செம்மை-அடி என்ற இரண்டு சொற்களா லாகியது. செம்மையிலுள்ள ஈற்று உயிர் மெய் கெட்டு முன் னின்ற மெய் திரிந்து முதலெழுத்து நீண்டு சேவடி என்றாயது. செம்மை என்பது நேர்மை, நடுவுநிலைமை. அடி என்பது அருளைக் குறிக்கின்றது. சேவடி விருப்பும் வெறுப்புமில்லாது எல்லா உயிர்க ளிடத்தும் நடுவு நிலைமையில் நின்று அதனதன் வினைக்குத் தக்கபடி பயனுதவும் அருள்.

ஏத்துதலாவது வணங்கல்; தொழுதல். ஆளுகிற ஆண்டவனாகிய ஈசனுடைய வியாபக அறிவு வேட்கை செயல்களில் ஒருவன் தனது வியாப்பிய அறிவு வேட்கை செயல்களை அடங்கும்படி செய்து ஈசனை அன்றித் தனக்கென ஒரு செயலும் இல்லை என்று அறிந்து தன் முனைப்பு நீங்கி நிற்றல்.

ஏத்துதல் இருவகை - ஒன்று இறைவன் உயிரினிடத்தும் உலகி னிடத்தும் தோன்றும் முறைமையை வேறாக நின்று பொது வியலில் வழிபடுதல். பொது வியலில் வழிபடுதல் கேட்டல் சிந்தித்தல்களாற் பெறப்படும். மற்றொன்று அவனோடு இரண்டற (அத்துவிதமாய்த்) தோன்றி நின்று சிறப்பியலில் வழிபடுதல். சிறப்பியலில் வழிபடுதல் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டைகூடல்களாற் பெறப்படும். பொது வியல் வழிபாடு சிறப்பியல் வழிபாட்டுக்குக் காரணமாகும். இங்கே கூறிய வழிபாடு இரண்டாவதாகக் கூறிய சிறப்பியல் வழிபாடு. இந்த வழிபாட்டைத்தான் அடிகள் 'ஞானத்தாற் றொழுவார் சில ஞானி கள்' என்ற குறுந்தொகைத் தேவாரப் பாட்டிற் கூறியருளியது.

ஈசன் என்னை அறிந்தது அறிதல். இறைவன் எப்பொழுதும் உயிரு டன் இரண்டறக் கலந்து நின்று அஃது உலகப் பொருளை அறியுமாறும் தன்னை அறியுமாறும் காணும் உதவியாகிய அறிதலைச் செய்து வருகி றான். அவன் அவ்வாறு உயிரினிடத்தில் காணு முதவியாகிய அறிதலைச் செய்யாவிட்டால் உயிர் ஒன்றையும் அறிய மாட்டாது. இவ்வாறு இறைவன் உயிரினிடம் நின்று காணு முதவியைச் செய்தலை உயி

ரானது உலக் நெறியில் அறியமாட்டாது. அஃது உலக நெறியை விட்டு வீட்டு நெறிக்கு வந்தபொழுது தன்னிடத்தில் இறைவன் இரண்டறக் கலந்து நின்று காணும் உதவியாகிய அறிதலைச் செய்து வருகின்றதை அறிகின்றது. அதனால் உயிர் தன்னிடம் விளங்குகின்ற இறைவனையும் அறிகின்றது. உயிரினுடைய இந்த நிலையை அடிகள் இங்கே கூறுகின்றார்.

மறக்கிற்பனே-கில் என்பது ஆற்றலுணர்த்தும் இடைநிலை. 'ஏ' இங்கே எதிர்மறைப் பொருளில் வந்தது. என்றால் மறக்கமுடியாது என்பது பொருள்.

எங்கும் நிறைந்துளள (வியாபகமாயுள்ள) இறைவனது அறிவுடன் இரண்டறக் கலந்து நிற்கும் நிலையிலுள்ள உயிர் இறைவனை எவ்வாறு மறத்தல் கூடும்? அந்நிலை நினைப்பும் மறப்புமற்ற நிலையாதலின் உயிருக்கு மறத்தல் கூடாது.

இத் தேவாரப் பாட்டினால் மக்கள் மலத் தன்மையினின்று நீங்கிச் சிவத்தன்மை அடைதற்கு இறைவனைச் சார்தலாகிய இறைவன் வழிபாடு (இறைவனுடைய வழியிலே பொருந்துதல்) இன்றியமையாது வேண்டப்படும் என்பது பெறப்பட்டது. இறைவன் வழிபாடு வேண்டப்படுவதொன்றன்று என்றும், இறைவன் வழிபாடு மக்கட் பொருட்டன்றி இறைவன் பொருட்டு என்றும் இக்காலத்தில் உண்மை அறியாது கூறும் போலி அறிஞர் கூறும் உரையும் இப்பாட்டினால் மறுக்கப் பட்டது என அறிக.

மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

---

# திருவாசகமும் பரஞ்சோதி முனிவரும்

[திரு. அ. மு. சரவணமுதலியார் அவர்கள்]

(சகரு-வது பக்கத் தொடர்ச்சி)

'இனி 'அடிகள் அங்ஙனங் கூறுவதற்குத் தான் ஏது என்ன' வென்பதைத் திருவாசகக் கருவிகொண்டு துருவி ஆராயுங்கால் மேல் அடியார் அல்லது பெரியார்களின் இலக்கணமாகக் கூறிய பொதுக்காரணமே யன்றி ஒரு சிறப்புக் காரணமுமுளது; அதுவும் அப்பொதுவின் ஒரு கூற்றிலடங்குமென்க. 'அதுதான் என்னை' யெனிற் கூறுதும்:—

அடிகள், யாவர்க்கு மேலா மளவிலாச் சீருடையானாகிய ஆண்டவன், யாவர்க்குங் கீழாகக் கருதப்பட்ட தம் பொருட்டு, அருட்டிருமேனி கொண்ட ஆசிரியனாய்ப் போந்து யாவரும் பெற்றறியா இன்பத்துள் தம்மை அழுத்தியதையும், பெருந்துறை யிடத்துக் குருந்த நிழலிலிருந்து பார்த்த அருணோக்காற் காய்ந்த இரும்பு நீரைப் பருகுமாறு தமது முனைப்பைப் பருகி, நீராயுருகவும், என்பெலாம் நெக்குருகவும், புன்புலால் யாக்கை புரைபுரை கனியவும், அன்பினாலாவி யோடியாக்கை ஆனந்தமாய்க் கசிந்துருகவும், ஊனையும் என்பையும் உருக்கித் தேனும் பாலுங் தீங்கன்னலு மமுதுமாய்த் தித்திக்கவும் செய்ததையும், கற்போலுமெனத் தாம் கருதிய தமது உள்ளத்தைக் கல்லைப் பிசைந்து கனியாக்கியது போலக் குழைத்ததையும்; வழிமறித்து வழிமறித்து அவனருளாரமுதத்தை ஊட்டியதையும், தாம் மறுத்து மறுத்து ஓடியதையும்; அடித்தடித்து அக்காரந் தீற்றிய அற்புதத்தையும் நினைந்து நினைந்து கசிந்து கசிந்து ஆற்றாராகி, 'சொல்லுவதறியேன்' என்றும், 'ஆற்றேன்' என்றும், 'தெரியேன்' என்றும், 'தரியேன்' என்றுங் கதறுவார்க்குப் பின்னும் தம்பொருட்டு அவன் நரிபரியாக்கி வந்த நன்மையும், பரி நரியாக்கிப் போந்த பான்மையும், தத்துவங்கடந்த அவன் திருமுடியின்கண் அத்தத்துவங்கட்கெல்லாங் கீழாய மண்ணைச் சுமந்து மாசுற்றதோடமையாது அவன் பொன்மேனி புண்மேனியாமாறு பிரம்படி பட்டதும், நினைவிற்கு வருமானால் அப்பெரியாரின் தூய உள்ளம் என்ன பாடுபட்டிருக்கு மென்பதை, சில ஆண்டுகட்குமுன நமது நாட்டிற்றோன்றி மக்களுக்குச் சமரச சன்மார்க்கத்தை அறிவுறுத்தி, சைவசமய குரவராம் தனிப் பெருமக்கள் பெருமையினை நன்குணர்ந்து, தனித் தனியாகப் பல பாக்களால் வழுத்தியது மன்றி, அவர் ஒவ்வொருவருக்கும் பப்பத்துப் பாக்களாகிய ஒவ்வொரு மாலை சாத்தி, அல்லும் பகலும் ஆண்டவனை நோக்கிக் கதறிக் கதறி அழைத்து, தம் அன்பனைத்தையும் பாட்டு வடிவங்களாக்கி மறைந்தருளிய இராமலிங்க அடிகளே தாம் அறியவில்லை யென்று கூறுவாரானல் புழுத்த நாயினுங் கடையனான யானோ அதனை அறிந்து கூற வல்லேன்?

அவ்விராமலிங்கப் பெரியார், அடிகளின் பொருட்டு ஆண்டவன் மண் சுமந்து அடிபட்ட பகுதியிலீடுபட்டுக் கூறுவதாவது:—

"வன்பட்ட கூடலில் வான்பட்ட வையை வரம்பிட்டநின்
பொன்பட்ட மேனியிற் புண்பட்டபோதிற் புவிநடையார்
துன்பட்ட வீரரந்தோ வாதவூரர்தந் தூயநெஞ்சம்
என்பட்டதோ வின்று கேட்டவென்னெஞ்ச மிடிபட்டதே"

என்பது.

இவ்வரிய செய்யுளின் நுண்பொருளை விரிக்கின் மிகப் பெருகுமாதலின் விடுகின்றேன். இப் பெரியார் இங்ஙனமே நாயன்மார்கள் வரலாற்றின்கண்ணுள்ள ஒவ்வொரு பகுதியி லீடுபட்டு அந்த வண்ணமாக நின்று அப்பயனை நுகர்தலை அவரியற்றிய 'திருவருட்பா' என்னும் அன்பு கனிந்த நூலின்கட் பரக்கக் காணலாம். இங்ஙனம் நமது அடிகளின் வரலாற்றிலுள்ள இறைவன் மண்சுமந்த பகுதியிலீடுபட்டு இடருழந்த இவர், சிவபெருமான் திருநல்லூரின்கண் திருநாவுக்கரசுகள் திருமுடியிற் றிருவடி தீட்டிய செய்தியி லீடுபட்டு உள்ளங் குளிர்ந்ததை நோக்கின், அவர் துன்பமறிந்து புழுங்கிய நமது உள்ளமுங் குளிருமாகலின் அதனை யறிந்து மேற்செல்லுவோமாக. அது,

"துடிவைத்த செங்கையரசே நல்லூரினின் றாமலர்ப்பொன்
அடிவைத்த போதெங்க ளப்பர்தஞ் சென்னியது குளிர்ந்தெப்
படிவைத்ததோ வின்பமியானெணுந்தோறு மிப்பாவிக்குமால்
குடிவைத்த புன்றலையொன்றோ மனமுங் குளிர்கின்றதோ"

என்பது.

இனி, ஆண்டவன் அடிகளின் பொருட்டு மண்சுமந்து மாறனால் மாறடி பட்டதை நினைந்து நினைந்து அடியார்களின் உள்ளம் புழுங்குமென்பதையும், அதற்குக் காரணம் அவர்களது அன்பே என்பதையும் குமரகுருபர அடிகள் திருவாரூர் நான்மணி மாலையிற் கூறிய,

"என்பணிந்த தென்கமலை யீசனார் பூங்கோயின்
முன்பணிந்த தெய்வ முனிவோர்கள்—அன்பென்னும்
புண்சுமந்தோம் நந்தி புடைத்தென்னார் புண்ணியனார்
மண்சுமந்தா ரென்றுருகு வார்"

என்னுஞ் செய்யுளாலும் அறியலாம். எனவே அடியார்க்கெளியனாகிய ஆண்டவன் தம்பொருட்டுச் செய்த அருளிப்பாடுகளனைத்தையும் உன்னியுன்னி யுருகும் நமது அடிகள் கருத்தில் யாது தோன்றியிருக்கும்? அவ்விறைவனுக்குக் கைம்மாறாகத் தாம் யாதேனுஞ் செய்யக் கருதுதல் அறிவுடை மக்களியல்பன்றோ! அங்ஙனங் கருதிய அடிகள், தங் கூர்த்த மதியாற் பல்காலும் ஆய்ந்து, "எல்லாம்வல்ல எம்மிறைவனுக்கு ஏழையேனாற் செய்யக் கிடப்பது யாது? ஒன்றுமில்லை" என்ற முடிவுக்கு வந்து, அதனைத் தமது திருவாசகத்திற் பலவிடங்களிலும்,

"மற்றறியேன் செய்யும் வகை"
"யானிதற்கில னோர் கைம்மாறு"
"உண்டாமோ கைம்மாறுரை"

என்னும் பொன்மொழிகளாற் புகன்றுவிட்டு, தாம் "ஆண்டவனுக்கு ஒரு பேரன்பனாக இருக்க வேண்டும்" என்னு முடிவுக்கு வந்தருளினர்.

"அன்பலாற் பொருளுமில்லை யையனையாறனார்க்கே"

என்னும் அப்பர் பெருமானருளிப்பாடும் இங்கே கருதத்தக்கது.

அங்ஙனம் முடிவு செய்த அடிகள் அந்த அன்புக்கு ஓர் வரையறை செய்தார்; எங்ஙனமெனின், "ஏழையேற்கு இத்துணைத் தலையளி செய்த அத்தலைவனை இடையறாது நினைந்து நினைந்து கனிந்து கனிந்து உள்ளந்தாளிலிருந்து உச்சியளவும் நெஞ்சாக நின்று உருக வேண்டும்; உடம்பெல்லாங் கண்ணாக விருந்து இன்ப அருவி பெருக்கி அழ வேண்டும்" என இக்கருத்தினை அடிகள் ஒரு திருப்பாட்டால் விளக்குதல் காண்க:—

"வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய்,
விண்ணோர் பெருமானே யெனக்கேட்டு வேட்டநெஞ்சாய்ப்
பள்ளந்தா ழுறுபுனலிற் கீழ்மேலாகப்
பதைத்துருகு மவர் நிற்கவென்னை யாண்டாய்க்கு
உள்ளந்தாள் நின்றுச்சி யளவு நெஞ்சா
யுருகாதா லுடம்பெல்லாங் கண்ணாயண்ணா
வெள்ளந் தான்பாயாதா னெஞ்சங் கல்லாங்
கண்ணிணையு மரமாந் தீவினையினேற்கே" (திருச்சதகம்).

அடிகள் தமது அன்பிற்கு அளவின்றி இவ்வாறு ஒரு வரையறை செய்து கொண்டமையால், பெரும்பொருள் தேடக் கருதிய ஒருவன் முன்னரே தன்னிடத்துள்ள பொருளைப் பொருளெனவே கருதாதது போலத் தமது ஒரு உள்ளம் ஓயாது உருகுதல் தோன்றப் பெறாராய், 'நெஞ்சங் கல்லாம்' என்றும், இரண்டு கண்களும் இடையறாது நீரொழுகுதலை அறியாதவராய்,

"கண்ணிணையு மரமாந் தீவினையி னேற்கே"

என்றுங் கூறிப் புடைபடக் கவல்கின்றார்.

இனி, "நூறாயிரம் பொற்காசுகள் ஈட்டுறேற்றான யான் ஒரு செல்வன்" என்னும் வரையறை செய்துகொண்டு ஈட்டும் ஒருவன் அத்தொகையிற் பத்துப் பொற்காசுகள் குறையினும் அவன், தன்னை ஒரு வறியவனென்று சொல்லிக் கொள்வானேயன்றிப் பொருளுடையவனென்று சொல்லமாட்டான். என்னை? அவன் வரையறுத்துக்கொண்டது அவ்வாறாகலி னென்பது. எனினும், ஏனையோர் அவனை ஒரு பெருஞ் செல்வ னென்று கூறுவார்களேயன்றி ஏழை யெனக் கூறமாட்டா ரென்பது கண்கூடு. அது போல அடிகள். தாம், வரையறுத்தவாறு ஆகவில்லை யெனக் கருதித் தம்மை 'அன்பில்லாதவன்' என்று பலவிடங்களிலுங் கூறினாரேனும், ஏனையோர் அவரை ஒரு 'போன்பர்' எனக் கொள்ளுதலே ஏற்புடைத் தென்க.

இஃது " தமது வெற்றி ஒரோவழித் தோன்றினும் அஃது தாம் வரையறுத்த வண்ணம் இல்லாமையின் அதனைத் தாம் அடைந்ததாகக் கருதாதது பெரியா ரியல்பில் ஒன்று" என மேலே காட்டியதனுள் அடங்குமென்க.

"நானுனக்கோ ரன்ப னென்பேன்"

"உலப்பிலாஅன் பருளி"

என ஒரோவழி அடிகள் கூறுவனவற்றை "அவர் தமது வெற்றியை மகிழ்ச்சி மேலீட்டால் தம்மை மறந்து ஒரோவிடத்துக் கூறிவிடுவதும் உண்டு" என மேலே காட்டியதனுள் அடக்கிக் கொள்க.

இனி, "பரஞ்சோதி முனிவர் திருவாசகப் பயிற்சி மேலீட்டால் அடிகளை 'அழுதடி யடைந்த அன்பர்' என்று கூறினார்" என மேலே காட்டியதற்கேற்ப அத் தொடரைத் திருவாசகக் கருத்துக்கு மாறுபடாமல் அதிலுள்ள ஆதரவுகளைக் கொண்டே வகுத்தும் விரித்துங் கூறினேம். இன்னும் அத் தொடரை ஈற்றடியாகக் கொண்ட 'எழுதரு மறைகள் தேறு' என்ற தலைப்பையுடைய செய்யுளில் "அடிகள் ஆண்டவனை இடையறாது பூசனை புரிந்து அழுது அவனடி யடைந்தார்" எனக் கூறப்படுவதால் அதற்கு அப் பரஞ்சோதியார் திருவாசகத்திற் கண்ட ஆதரவுகள்.

"பாசவேர்" என்ற முதலையுடைய பாட்டின் "பூசனை யுகந்தென் சிந்தையுட் புகுந்து பூங்கழல் காட்டிய பொருளே" என்னும் அடியும், "சித்தமே புகுந்து" என்று தொடங்குந் திருவாசகத்திலுள்ள "தன்பொற் கழற்கணே பன்மலர் கொய்து சேர்த்தலும், முத்தி தந்திந்த மூவுலகுக்கு மப்புறத் தெமை வைத்திடும் அத்தன்" என்பதுமாம்.

இனி, "தொழுத கையின ராகித் தூமலர்க் கண்கள் நீர் மல்கு தொண்டர்க்கு, வழுவிலாமலர்ச் சேவடி" என்னுந் திருவாசகத்தை உட்கொண்டு, "அழுதிசை பாடுந் தொண்டிலகப்படும் பாதம்" என்று பரஞ்சோதியார் பகர்ந்தது பாராட்டத் தக்கது. இன்னும் அவர், அடிகள் ஆண்டவ னருளொளியிற் கலந்ததைக் கூறுங்காலும்,

"பன்னாட் பரவிப் பணி செய்ய"

என்னுந் திருவாசகத் தொடரைக் கருத்துட்கொண்டு, 'பன்னாள்' என்பதைப் 'பரவி' 'பணிசெய்ய' என்னு மிரண்டிடத்துங் கூட்டி, பரவுதலைத் திருவாசகம் பாடுதலென்றும், பணிசெய்தலை வழிபாடு (பூசனை) ஆற்றலென்றும் பொருள் கொண்டு,

"மாசறு மணி போற்பன்னாள் வாசகமாலை சாத்திப்
பூசனை செய்து பன்னாட் புண்ணிய மன்று ளாடும்
ஈசன தடிக் கீழெய்தி யீறிலா வறி வானந்தத்
தேசொடுகலந்து நின்றார் சிவனருள் விளக்க வந்தார்"

எனக் கல்லுங் கரையுமாறு கவின்பெறப் புகன்ற பொன்மொழி போற்றத் தக்கதாகும்.

இதுகாறுங் கூறியவாற்றால் "பரஞ்சோதி முனிவர் திருவாசகமென்னும் ஒப்புயர்வற்ற திப்பிய தேனைத் தெவிட்டப் பருகித் தேக்கெறிந்தவர்" என்பது நன்கு புலனாதல் ஒருதலை.

செந்தமிழாராய்ச்சிச் செல்வராம் உயர்திரு. மறைமலையடிகள் என்னையும் ஒருவனாகக் கருதி இப்பணி செய்ய ஆணை தந்தமைக்கு அப்பெரியாரை எழுமை எழுபிறப்பும் உள்ளுங் கடப்பாடுடையேனாய், இப்பணியை எனக்குத் தோன்றாத் துணையாக இருந்து இயற்றுவித்த எனது இன்னுயிர்த் தலைவனும் இறைவன் மலரடியை மனமொழி மெய்யால் நினைந்து வாழ்த்தி வணங்குகின்றேன்.

---

# பிரகிருதி சாஸ்திரம்

(ருடய-வது பக்கத் தொடர்ச்சி)

[C. சுப்பிரமணியாசாரி B. A.]

**12.** தன்னணுக்கவர்ச்சி:—[1] இதுகாறும் ஒரு பொருள் மற்றொரு பொருளினை இழுத்தலைப் பற்றிச் சொன்னோம். இனி ஒரு பொருளணுக்களுள்ளேயுமித்தன்மையான கவர்ச்சி உண்மையைக் கவனிப்பாம். அணுக்களொன்றனை யொன்று கவராவிடின் பூமியாதியாவும் மணலைப்போற் பொடிமயமாய் நிற்கும். இக்கவர்ச்சி யுளதாதற்கு அணுக்கள் ஒன்றற்கொன்று மிகச் சிறிய தூரத்திலிருத்தல் வேண்டும். இத் தன்னணுக் கவர்ச்சி திடப் பொருள்களிலதிகமாகவும் திரவப் பொருள்களிற் சமமாகவும் வாயுப் பொருள்களில் இன்மையாகவு முள்ளது. முன்னமோரிடத்துச் சொல்லிய வண்ணம் கொட்டைப்பாக்களவு யாதேனுமொரு வாயுப் பொருளை ஓரறைக்குள் விட்டால் அஃதுடனே கொட்டைப்பாக்களவு இடமுந் தவறாமலெங்கும் பரவிவிடும். ஆகவே வாயுவின் அணுக்களில் தன்னணுக் கவர்ச்சி

1 Cohesion.

சிறிதுமில்லை யென்பது உள்ளங்கை நெல்லிக்கனியென விளங்கும். ஆனால் முன்னொரு முறை சொல்லியபடி மிகுந்த அழுத்தல் வலியினாலும் குளிர்ச்சியினாலும் வாயு திராவக ரூபமாக மாறிய விடத்து அவ்வாயுவி னணுக்கள் இத் தன்னணுக் கவர்ச்சியைப் பெறுகின்றன.

13. திண்மை:—[1] இது முதல் மேல் வரும் நான்கு குணங்களும் திடப்பொரு ளணுக்களிடத்து மட்டுமே விளங்கும். இவை நான்குந் தன்னணுக் கவர்ச்சியாலுண்டான வேறு குணங்களே யென்க. எந்தப் பொருளி னணுக்கள் தத்தமக்குரிய விடங்களை விட்டுப் பெயராது அப்படிப் பெயர்க்க வரும் புறக்காரணங்களை அதிகமாக எதிரிட்டு நிற்கின்றனவோ அப்பொருளினைத் திண்பொருளெனவும், அப்படி யெதிரிட்டு நிற்க மாட்டாத அணுக்களாகிய பொருளினை மென்பொருளெனவும் [2] சொல்லுவார்கள். யாதேனு மொரு பொருள் வேறொரு பொருளினைக் கீறவல்லதாயின் கீறப்பட்ட பொருளினுங் கீறிய பொருள் திண்ணிதென ஊகித்தல் வேண்டும். பொன்னினைக் கண்ணாடி கீறவல்லதாதலின் முன்னது நோக்கப் பின்னது திண்பொருளென்க.

14. தகட்டுத்தன்மை:— [3] பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, துத்தநாகம் ஆகிய லோகங்களை மெல்லிய தகடுகளாக அடித்தல் கூடும். பொன்னை மெல்லிய காயிதத்தைப்போல் மிகவும் மெல்லியதாக அடித்திருக்கிறார்கள்.

15. கம்பித்தன்மை:—[4] இக்குணத்தால் மேற்சொன்ன லோகங்களியாவும் நுண்ணிய கம்பிகளாக இழுக்கப்படல் கூடும்.

16. ஒட்டுறவு:—[5] எப்பொருளி னணுக்கள் பிளத்தல், அறுத்தல், முதலிய புறச்செய்கைக் காரணங்களை அதிகமாக எதிர்த்து நிற்கின்றனவோ அப்பொருளுக்கு ஒட்டுறவின் குணமதிகமாக வுளதென்று சொல்லப்படும். எப்பொரு ளணுக்கள் தன் னணுக் கவர்ச்சியை அதிகமாகப் பெற்றுளவோ அப்

---

1 Hardness 2 Soft body 3 Malleability 4 Ductility 5 Tenacity

பொருளணுக்கள் இவ்வொட்டுறவினையும் மிகப் பொருந்தியன வாகும். இக்குணத்தினை மிக அதிகமாகவுடையது எஃகு.

**17.** பிறிதினணுக்கவர்ச்சி:—[1] இஃது இரண்டு வேறாகிய பொருள்களினணுக்களுக் குளது. இவ்விரண்டு பொருள்களும் திடப்பொருள்களாகவாயினும், ஒன்று திடப்பொருள் மற்றொன்று வாயுப்பொருளாகவாயினும், ஒன்று திடப்பொருள் மற்றொன்று திரவப்பொருளாகவாயினும், இரண்டும் திரவப் பொருள்களாகவாயினும் இருத்தல் கூடும். துணியில் அழுக்குப் படிவது இரண்டு திடப்பொருளணுக்களின் பிறிதினணுக் கவர்ச்சிக் குதாரணமாகும். முன்னர்க் கூறிய உறழ்ச்சி வலிக்கு முக்கிய காரணமாயுள்ளதும், இத்தன்மையான கவர்ச்சியே யாகும். இனித் திடப்பொருளணுக்களுக்கும் திரவப்பொருளணுக்களுக்கு முள்ள கவர்ச்சியை விளக்குவாம். கையினை நீரில் தோய்த்தபோது தோய்ந்த பாகத்தெல்லாம் நீரொட்டிச் கொள்ளும். அப்போது கை நனைந்த தென்கிறோம். ஆதலால் நனைந்த விடங்களிலெல்லாம் இக்கவர்ச்சியுள்ளதெனக் கொள்க. ஆனால் இருப்புத் தகட்டினைப் பாதரசத்தில் தோய்த்தாலும் தாமரையிலையில் நீர்த்துளிகள் பெய்தாலும் அவ்வித நனைதலில்லாமைக்குக் காரணம் என்னவெனில் இங்கே பிறிதினணுக் கவர்ச்சியும் தன்னணுக் கவர்ச்சியு மொன்றினோடொன்று மலைகின்றன. கையினை நீரில் தோய்த்துழி நீரணுக்களொன்றற் கொன்று உடைய தன்னணுக் கவர்ச்சியினும் நீரணுக்களுக்கும் கையணுக்களுக்கு முள்ள பிறிதினணுக் கவர்ச்சி யதிகமானதனாற் கையில் நீர் ஒட்டியது. ஆயின் தாமரையிலையில் நீர் பெய்தவிடத்து நீரணுக்களின் தன்னணுக் கவர்ச்சி நீரணுக்களுக்கும் தாமரை யணுக்களுக்குமுள்ள பிறிதினணுக் கவர்ச்சியினும் அதிகமாதலால் தாமரையிலை நனையப்பெறாது நின்றதென்க.

இதன் சம்பந்தமாக 'மயிர்ப்புழைக் கவர்ச்சி'[2] என்பதொன்று உரைக்கற்பாலது. மயிரின் நுண்ணிய புழையுடைய குழலொன்றை நீரிற் பிடிக்க உண்ணீர்மட்டம் வெளிநீர் மட்டத்

1. Adhesion　　2. Capillary attraction

திற்குப் பலவங்குல முயரமாக விருக்கக் காணலாம். புழை அதிகமாக அதிகமாக உள்ளிருக்கும் நீர் மட்டம் வரவரக் குறைந்து வெளிநீர் மட்டத்திற்கு வந்துவிடும். அக்குழலினையே பாதரசத்தில் நிற்கவிட்டால் உள்ளிருக்கும் பாதரச மட்டம் வெளியிலுள்ள இரச மட்டத்திற்குப் பலவங்குலம் தாழ்வாக விருக்கக் காணலாம். ஏனெனில் முன்னைய வுதாரணத்தின் நீரணுக்களின் தன்னணுக் கவர்ச்சி அதிகமாதலாற் குழலால் நீர்த்துளிகள் நான்கு பக்கமு மிழுக்கப்பட அத்துளிகளின் இடை குறைதலால் மேலெழும்புகின்றன. பின்னைய வுதாரணத்தில் இரசவணுக்களின் தன்னணுக் கவர்ச்சி யதிகமாதலாற் குழலினுளிருக்கும் இரசம் நடுவிற் குவியவும் இடையதிகமாதலால் அழுந்துகின்றன இம் மயிர்ப்புழைக் கவர்ச்சியினாற்றான் மரங்கள் பாதத்தால் நீரை யுட்கொள்வதும் வர்த்தியினூடே எண்ணெயேற விளக்குக ளெரிவது மென்க. இரண்டு கண்ணாடிப் பாத்திரங்களெடுத்து ஒன்றை மேலாகவும் அதன் பக்கத்தில் மற்றொன்றைக் கொஞ்சம் கீழாகவும் இருத்தி மேலே யுள்ளதிற் பாதி நீரும் பாதி எண்ணெயும் விட்டு வர்த்தி யொன்றினை நீரில் நனைத்து அதனிரண்டு முனைகள் அவ்விரண்டு பாத்திரங்களினடி யுறக் கவிழ்த்த பகரத்தினை யொப்பு [ғ] விடுக்க ஒன்றிரண்டு மணி நேரத்தில் மேற் பாத்திரத்து நீரெல்லாம் கீழ்ப் பாத்திரத்தில் வர எண்ணெய் மாத்திரம் மேல் பாத்திரத்தில் நிற்கக் காணலாம். வர்த்தி எண்ணெயில் தோய்த்ததாயின் எண்ணெய் கீழ்ப் பாத்திரத்திலும் நீர் மாத்திரம் மேற் பாத்திரத்திலும் நிற்கக் காணலாம்.

இரண்டு திரவப்பொருள்களின் கவர்ச்சியைப்பற்றிக் கவனிப்போம். ஒரு பாத்திரத்தி லடியில் நீரும் மேலே சாராயமும் விட்டால் இரண்டும் சீக்கிரம் கலந்துவிடும். என்னை? பிறிதினணுக் கவர்ச்சி தன்னணுக் கவர்ச்சியினும் இங்கே அதிகமாதலால், நீரு மெண்ணெயு மாயிற் கலவா; என்னை? இங்கே தன்னணுக் கவர்ச்சி பிறிதினணுக் கவர்ச்சியினும் அதிக மாதலாலென்க. காப்பி அல்லது தேயிலைத் தண்ணீரில் சர்க்கரையைக் கொட்டியவிடத்துக் குமிழிகள் கிளம்புகின்றன; என்னை?

சர்க்கரையாகிய திடப்பொருளி னணுக்கள் பிறிதினணுக் கவர்ச்சி வலியால் வாயுவை இழுக்க நீரினுளிட்டபோது சர்க்கரை தன்னிலை மாறவே விடுபட்ட வாயுவி னணுக்கள் குமிழிகளா யெழும்புகின்றன வென்க.

**18. கலவைக் கவர்ச்சி:—** [1] நீரை யெத்தனைக் கூறுபடுத்தினும் ஒவ்வொரு கூறும் நீராகவே இருக்கும். ஆனால் மின்வலியி னுதவியால் நீரினை ஜலவாயு [2] பிராணவாயு [3] வென விரண்டு வாயுக்களாகப் பிரித்தல் கூடும். இவ்விரண்டு வாயுக்களும் கலவைக் கவர்ச்சியாற் புணர்ந்த விடத்து மீண்டும் நீராய் விடும். இது போலவே ஜலவாயு பிராண வாயு வென்பவைகளை வேறிரண்டு பொருள்களாகப் பிரிக்கப்படக் கூடவில்லை யாதேனுமொரு பொருளை வேறிரண்டு அல்லது மேற்பட்ட பொருள்களாகப் பிரிக்கக்கூடுமாயின் அத்தன்மையான பொருளுக்குக் கலவைப் பொருள் [4] என்றும் அப்படி வேறு பொருள்களாகப் பிரிக்கப்பட மாட்டாத பொருளினை முதற்பொருள் அல்லது தன்மாத்திரைப் பொருளென்றும் [5] வழங்குவார்கள்.

(ஞானபோதினி)

---

# பெண்மை

[மணி. திருநாவுக்கரசு முதலியார்]

பெண்மை என்னும் சொல்லுக்கு விரும்பப்படுந் தன்மை என்று பொருள். இச் சொல்லினின்றே விருப்பம் என்னும் பொருளைத் தரும் பெட்பு என்பதும், பெண்டு, பெண்டாட்டி, பேண் முதலான மொழிகளும் தோன்றின. விரும்பப்படுந் தன்மையாவது மென்மை. இஃது உற்றறியும் மென்மைமட்டுமன்று. காணும் பொழுதே தோன்றும் அமைதித் தன்மையும் கேட்குங்கால் இனிக்கும் குளிர்ச்சியான மொழியும் அழகும் முதலான எல்லாப் புலன்கட்கும் இன்பத்தை ஊட்டும் ஓர் இனிமைப் பண்பு. பெண் அமைப்பு இயற்கையிலே தணிவும் பணிவும் அழகும் மென்மையும் வாய்ந்ததாக உளது. உலக

---

1. Chemical attraction 2. Hydrogen 3. Oxygen 4. Compound 5. Element.

முயற்சியிலே ஓடி யுழைத்து இளைத்துக் களைத்து வீட்டுக்குள் நுழையும் ஆடவன் உவகையோடு மெத்தென்ற சாயலுடைய மனைவியின் புன்னகைக்கு ஏக்கற்று நிற்கின்றான். நோய் வயப்பட்டு இன்னலுழக்கும் ஒருவன் தன்னை மார்போடு சாய்த்துக் கொண்டு மெல்லிய மொழிகளைச் சொல்லி இன்புறுத்தும் துணைவியை ஆருயிர் மருந்தென அறிந்து மகிழ்கின்றான். உண்மையில் ஆண் மகன் செய்யும் செயலெல்லாம் பெண் மகள் பார்த்து வியந்து மகிழ்வதற்காகவே என்பது ஊன்றிப் பார்ப்பவர்க்கு உள்ளங்கை நெல்லி யெனத் தெள்ளெனப் புலப்படும். மகளிர் ஒவ்வோர் உறுப்பும் குளிர்ச்சியையும் மென்மையையும் அழகையும் உடையனவாக உள்ளன. வில்லென வளைந்த சிறு நுதலும், நீண்டு அகன்ற கருவிழிகளும், முழு மதி யொத்த வதனமும், மெத்தெனத் திரண்ட தோள்களும், உருண்டு வட்டமான அழகிய மார்புகளும், செக்கச் சிவந்த இதழும், எல்லாம் ஆடவர் இன்புறத் தக்கனவாகவே அமைந்துள்ளன. இதனாலேயே பெண் மக்களை வெறுத்துரைத்த கடுந்துறவிகளும் தாம் பாடிய பாட்டுக்களிலே அவர் தம் அழகையும் உறுப்பு நலங்களையும் பாராட்டி நின்றனர். மணிவாசகனாரும், 'கிளியனார் கிளவி அஞ்சேன் அவர் கிளி முறுவலஞ்சேன்' என்றும், 'ஈர்க்கிடை போகா இளமுலை மாதர்தம் கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்' என்றும் கூறியருளினர். நம்முடைய செந்தமிழ் நூல்களிலே பெண்களைப்பற்றி வரும் வருணனைகளில் சிலவற்றைப் பார்த்தாலும் நம் முன்னோர் பெண்கள்பால் வைத்திருந்த உயர்ந்த காதலன்பும் உண்மைப் பெருமதிப்பும் நன்கு விளங்கும்.

தமிழிலே உள்ள கோவை நூலைப் படித் தின்புறாதார் பிறப்புப் பயனற்றதென்றே நாம் கருதுகிறோம். திருக்கோவையார் கோவைகளிலே தலைசிறந்து விளங்குகின்றது. இரண்டாம் படியிலே இலங்குவது தஞ்சைவாணன் கோவை. இவற்றிலே வரும் செய்யுட்கள் எத்துணை மெல்லிய மொழிகளால் எத்துணை உருக்கத்தை விளைக்கின்றன! தலைமகன் தன் காதற்குரிய தலைமகளை எவ்வளவு சிறந்தவளாகவும் மென்மை யுடையவளாகவும்

பெருமை யுடையவளாகவும் கருதுகின்றான்! எவ்வளவு கவலை உடையனாக அவள் பால் ஒழுகுகின்றான்! இவை யெல்லாம் ஆடவர் பெண்டிரிடம் கொண்டுள்ள நன்மதிப்பை அன்றோ காட்டும்?

'தாயிற் சிறந்த தமரில்லை' என்றார் புலவர் ஒருவர். நாராயண மந்திரத்தின் பெருமையைப் பாராட்ட வந்த பெரியார் ஒருவர், 'பெற்ற தாயினுமாயின செய்யும்' எனத் தாயின் அருமையைப் பாராட்டினார். 'ஈன்றாள் பசி காண்பானாயினும்' என்றார் வள்ளுவனார். 'ஈன்ற ஞான்றினும் பெரிதுவந்தனளே' என்றார் இன்னொரு புலவர். முற்றத் துறந்த பட்டினத்தார் தாயார் பிரிவுக் காற்றாது புலம்பினர். ஒப்புயர் வில்லா ஒரு செழும் பொருளைப் பாடிய உத்தமத் தொண்டர்கள் 'அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ' என்றும், 'அம்மையே அப்பா ஒப்பிலா மணியே' என்றும் வாய் நிரம்பப் பாடினர். 'தாயினும் நல்லன் சங்கரன்' என்றனர். துறவியாகிய மகனைத் தந்தை தொழலாமென்றும், ஆனால் தாயை அத் துறவியும் வணங்க வேண்டுமென்றும் நூல்களிலே குறித்தனர். தாயின் பெருமை பெண்மையின் பெருமை யன்றோ! பெண்பாலார்க் குரியன அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும் நாற்குணங்களென்றும், ஆண் பாலார்க்கு உரியன அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி என்னும் நாற்குணங்கள் என்றும் ஆராய்ந்து முடிவு கட்டிய செந்தமிழ் முதுமக்கள் இருபாலார்க்கும் உள்ள பெருமையை இனிது விளக்கிக் காட்டினர். பெண்பாலரிடம் அச்சமே ஒழுகைத் தரும்; நாணம் விருப்பத்தை விளைக்கும்; மடம் மகிழ்வை ஊட்டும்; பயிர்ப்பு மதிப்பை மிகுக்கும். பெண் மக்கள் மென்மைத் தன்மையாலும் பிள்ளைப்பேறு முதலான செயல்களாலும் ஆடவரால் என்றும் அணைத்துப் பாதுகாக்கப் படும் அருஞ் செல்வங்கள் ஆவர். அவரை இனிய புன்னகை தவழும் முகத்தாலும், காதல் தோய்ந்த சொற்களாலும், பொன்னாலும், பொலிவுள்ள ஆடையாலும் ஆண்மகன் உருகச் செய்ய வேண்டும். ஆணும் பெண்ணும் ஒருவர்க்கொருவர் இன்றியமையாச் சிறப்பினராக இருக்கின்றனர். ஆடவர் நோயை

ஆற்றுவதற்குப் பெண்மக்கள் எத்துணை இன்றியமையாத துணை வரோ அத்துணையே ஆடவர் மகளிர் நோயை ஆற்றத்தக்க துணையாவர். இதனை அறியாத அன்பில்லா ஆடவர் பலர் தம் மனைவி நோய் வயப்பட்டிருக்கையில் கண்ணெடுத்தும் பாராம லும் அவர் துன்பத்தைக் காது கொடுத்துக் கேளாமலும் அருகே சென்று அன்பு காட்டாமலும் உளர். அந்தோ! இத் தகைய கொடியோர்க்கு நல்லறிவு என்று வரும்?

மாதரை மதிக்கின்றவன் தன் தாயை மதிக்கின்றவன் ஆகின்றான். தாய் செய்த நன்றிக்குக் கைம்மாறு இன்றெனக் கருதுவர் யாவரும்.

"அன்னையே அடியேனுக்கா ஆற்றிய வருத்த மெல்லாம், உன்னியே பார்க்கிற் கைம்மாறொன்றிலை உனக்கோர் கோயில், மன்னுற வமைத்துப் பொன்னால் வடிவமும் சமைத்து வைத்து, முன்னுற வணங்கிற் செய்யுள் மொழியினும் முற்றாதே."

"அருவமாய் மறைந்து நின்ற அற்புதக் கடவுள் அன்பின், உருவமே நீயேயானால் உரைப்பதென் உண்மையாகப், பருவமே நோக்கிச் செய்த பாடெல்லாம் நினைத்துப் பார்க்கின், உருகிடும் ஊனும் உள்ளும் உயிருடன் எவையுந்தானே."

தான் பெற்ற மக்களுக்காக இரவெல்லாம் கண் விழித்தும், கைக்கும் மருந்தை உட்கொண்டும், கவலை யுழந்தும், கணவ ருக்கு இனியன கூறி மகிழ்வித்தும், மக்களுக்கு வேண்டுவன செய்தும், அல்லலுழக்கும் தனக்கென வாழாப் பெருந்தகைப் பெண்ணின் பெருமையை என்னென்பேம்! என்னென்பேம்! இவர் பெருமை அன்றோ ஆண் மக்கள் பெருமை! இவர் தம் அருமை அன்றோ ஆடவர் அருமை! இவருடைத் தலையன்பே அன்றோ மைந்தர் பேரின்பம்! 'பெண்ணினுட் கற்புடையாட் பெற்றான் சாவா உடம்பு எய்தினனன்றோ?' இத்தகைய பெண் ணினால் அன்றோ மனைக்கு மங்கலம்! இவரே யன்றோ நம் நாட் டுக் குரிய செல்வ நிலயங்கள்! இவர் வாழ்ந்தாலன்றோ நாம் வாழ்வோம்! இவரைப் போற்றி மகிழ்வித்து அறிவும் ஆற்ற லும் உடையராகச் செய்து தம் பெண்மைக் குணங்கள் மிளி

ரும்படிச் செய்வித்தலே ஆடவர் கைக்கொள்ள வேண்டிய கடமைகளாம்.

பண்டைக் காலத்திலே நமது நாட்டிலே பெண்ணுக்குப் பெருமை இல்லையென்று சிலர் நினைக்கின்றனர். அது தவறு. இடையிலே தொலையாச் சனியாகப் புகுந்த சில ஒழுககங்களால் ஒருசார் மக்களிடை இக்கொடுஞ் செயல் காணப்பட்டது. அது பிற்காலத்திலே தப்பான எண்ணத்தால் எல்லாரிடமும் பரவிவிட்டது. முன்னே நம் மக்கள் பெண்பாலரிடம் வைத்திருந்த நன்குமதிப்புக்கு அளவே யில்லை. சிவபெருமான் உமாதேவியாரை ஒரு பாகத்திலே வைத்திருப்பதும், திருமால் திருமகளைத் தம் மார்பிலே வைத்திருப்பதும், நான்முகன் கலைமகளை நாவிலே வைத்திருப்பதும் நம் பண்டைக்கால மக்கள் பெண்டிர் பால் காட்டிய நாகரிகத்தை அன்றி வேறெதனை விளக்கும் கூறுமின் ! அன்றியும் சத்தி பீடங்களும், காளி கோயில்களும் விளக்குவன யாவை? கஞ்சி காமாட்சி, காசி விசாலாட்சி, மதுரை மீனாட்சி என்னும் பெருமித மொழிகள் யாருக்கு உரியன?

ஒவ்வோர் ஊரிலும் கோயில்கொண் டெழுந்தருளியுள்ள கிராமதேவதை ஆணா? பெண்ணா? இப் பெண் தெய்வம் அவ்வூரிலே இருந்து வாழ்ந்த ஓர் அருமைத் திருமகளாக இருப்பினும் அன்றி அவ்வூர் மக்களால் கடவுளுருவத்திற் சமைக்கப்பட்ட பாவனா சொரூபமாக இருப்பினும் அது புலப்படுத்துவது பெண்ணின் மாட்சியே அன்றோ?

இனி ஒவ்வோர் மனையினும் பூவாடையாக வீற்றிருப்பது யார்? ஒவ்வோர் வேப்பமரத்தின் குளிர்ந்து செழித்த இனிய நீழலினும் அமர்ந்திருப்பது யார்? இவற்றை யெல்லாம் ஆராய்ந்து பார்க்கின் மகளிர் பெருமை மலையிலக்காக விளங்கவில்லையா? சில நூல்களிலே பெண்களுக்கு வீடுபே றில்லை யென எழுதிவைத்திருத்தலைக் கெதாறு கெதிகமாகப் பிற்காலத்திலே இலக்கண நூல்களிலேயும் புலவர் சிலர் ஆண்டுவிட்டனர். அவர் தம் அங்கத்தையும் உத்தமம், மத்திமம், அதமம் எனப் பிரித்துக் காட்டினர். இப்பொருத்தமற்ற ஆபாசங்

களை அடியோடு வாரி எறிவதுபோல் தமிழ்நாட்டுச் செய்திகள் விளங்குகின்றன. எங்ஙனமெனின், காரைக்கால் புனிதவதியார் பெறுதற்கரிய பேறு பெற்றதாகவும், மங்கையர்க்கரசியார், திலகவதியார், இசை ஞானியார் முதலானவர்கள் வீடு பெற்றெனரென்றும் பெரியபுராணமும், சூடிக்கொடுத்த நாச்சியார் முத்தி பெற்றனர் என்றும் வைணவபுராணமும் கூறுதலால், பெண்மக்கட்கு வீடுபேறில்லை என்று வாய் கூசாது கூறும் கொள்கை தலை சாய்க்குமன்றோ! ஆடவர் தமது ஒழுக்கங்களைச் செவ்வையாக ஆற்றிப் பெருமை பெறுதல் வேண்டும். அங்ஙனமே பெண்கள் தமக்குரிய ஒழுக்கங்களில் வழுவாமல் நின்று பெருமை அடையவேண்டும்; ஆயின், இதில் ஒருவரினும் ஒருவர் உயர்ந்தவராதல் எங்கே உளது?

> 'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
> கருமமே கட்டளைக் கல்'—குறள்.

---

# குயில்

[காழி. சிவ. கண்ணுசாமி B. A.]

இன்னிசைக்கு எடுத்துக் காட்டாய் விளங்கும் குயில் என்னும் பறவையை அறியாதார் இரார் என்றே நம்புகிறோம். குயிலின் நிறம் பொதுவாகக் கறுப்பேயாயினும், ஆண் குயிலின் நிறம் ஒரு சிறிது பைந்நீலம் கலந்த கறுப்பென்றே கூறவேண்டும். அதுபற்றியே குயிலைக் குறித்துப் பாடிய நம் பெரியோர்கள் யாவரும் அதைக் கருங்குயில் என்று கூறுவதைவிட "மணி நிறக் குயில்" என்று கூறுவதையே பெரிதும் விழைந்தனர். சைவ சமய குரவர்களில் ஒருவரான மணிவாசகப் பெருந்தகையார் வெளிப்படையாக "நீல உருவிற் குயிலே" என்று விளித்திருத்தலுங் காண்க.

இக் குயிலினம் இந்தியநாடு, இலங்கை, கடாரம் என்ற பர்மா, மலேயா, பிலிப்பைன் தீவுகள் ஆகிய இடங்களெங்கணும் பரந்து காணப்படும்.

காகம் முதலிய மற்றைப் பறவைகளைப் போன்று இக் குயில் பெரும்பாலும் மக்கள் வாழும் இடங்களில் வந்து பழகுவ தில்லை. மரங்கள் செறிந்த சோலைகளிலும் தோப்புகளிலும் சிறப்பாக மாமரங்களிலுமே இது தங்கியிருக்கும் இயல்பை யுடையது. உணவு கருதி ஓரோவோர் காலத்து ஒரு சிறிது இது தரையிடைப் பறந்துவந்து தங்குவ துண்டாயினும் அப் படித் தங்குவது இமைப்பொழுது என்றுதான் கூறவேண்டும்.

குயிற் குரலுக்கு மிஞ்சிய இன்னிசை இல்லை என்பது யாவரு மொப்ப முடிந்த தோர் உண்மை. காட்டிலே யன்றிக் கூட்டிலே அடைபட்டுக்கிடக்கும் காலத்தும் குயில் கூவும் குரல் இனிமை நிறைந்தே யிருக்கும். வசந்த காலம் என்று கருதப் படும் சித்திரை முதல் ஆடி ஈறாகவுள்ள மாதங்களில் குயில் கூவு வதைச் சோலைகள்தோறுங் கேட்கலாம். அக்காலமே அதன் புணர்ச்சிக் காலமாகும். உற்றுக் கேட்பாருக்கு அது "கு-யீல், கு-யீல்" என்று கூவுவதுபோலவே தோற்றும்.

"குயில் முட்டையிடக் காகங் கண்டு கழிக்கும்" என்ற ஒரு பழமொழி தமிழ் நாட்டில் வழங்குவதைப் பலர் அறிந்தி ருக்கலாம். கூடு கட்டி வாழும் இயற்கை அறிவில்லாததாலோ, அன்றி இட்ட முட்டைகளை யடைகாத்துக் குஞ்சு பொரிக்க வைக்கும் ஆற்றலும் அவகாசமும் இல்லாமையாலோ, குயில் காகத்தின் கூட்டிலேயே கள்ளத்தனமாகச் சென்று முட்டைக ளிட்டு விடுவது வழக்கம். காகம் தன் முட்டைகளோடு அம் முட்டைகளையும் பெருங் கவலையுடன் அடைகாத்துப் பொரிக்க வைத்தபின் இயற்கை மாறாமல் குயிற் குஞ்சுகள் தங் கள் இனிய குரலுடன் கூவு மொலி கேட்டவுடன் அக்குஞ்சு களை வெளியே அகற்றிவிடுமென்று அறிந்தோர் கூறுவர்.

I

"வசந்த காலம் வாய்ப்புடன் துவங்கிற்று; தென்றலும் மென்மை நிறைந்து வீசிற்று; நறுமணம் கனியும் அரும்புகள் அவிழ்ந்தன. இவற்றைக் கண்டு உவகை மலிந்து "கூ, கூ" என்று இடை விடாது கூவியோன் யார்?"

II

"பெறற்கரிய பருவமும் இளந் தென்றலும் அவனை இன்ப வாரிதியில் அழுத்திற்று போலும்! அதனால் பிணி, துனி, பிணக்கு என்றவற்றை யெல்லாம் மறந்துவிட்டனனோ? இன்றேல் இவ்வளவு இனிமையுடன் "கூ, கூ" எனக் கூவுவானேன்?"

III

"அந்தம் நிறைந்த காட்சிகள் அவன் நெஞ்சத்தை அடியோடு பிணித்துவிட்டன போலும்! அதனால்தான் ஓரிடத்திலும் உட்காராது பறந்து பறந்து திரிகிறான். மாம்பூக்களின் மகரந்தம் கலந்து நிறைந்த இளந்தென்றல் அவனுக்கு அளவற்ற களிப்பை யூட்டிற்று. அதனாலன்றோ குரலெடுத்துக் "கூ"வென அவன் கூவுவது?"

IV

"இறைவன் அவனைக் கரு நிறத்துடன் படைத்ததோடன்றிக் கார்காலத்திலும், பனிக் காலங்களிலும் வாய் திறந்து கூவ முடியாதவாறு பணித்திருக்கிறான். இக்குறைகளோடிருந்தும் இவ்வுலகத்தையும் இவ்வுலக மக்களையும் அவன் அன்புடன் நேசிப்பதாலன்றோ "கூ, கூ" வெனக் கூவா நின்றான்?"

இந்நான்கும் வங்கநாட்டுச் சிறந்த கவிகளில் ஒருவராகிய திரு. சத்யேந்திர நாத தத்தர் என்பவராற் "குயிற் குரல்" என்ற பெயருடன் பாடப்பெற்ற பாட்டுக்களின் பொருளாகும்.

இயற்கை யழகு ததும்பும் இக் கருத்துக்களோடு மணிவாசகப் பெருந்தகையார் பாடியருளிய குயிற்பத்து என்பதிலுள்ள சீரிய கருத்துக்களை எடுத்து விளக்க இடமின்மையால் இங்கே எழுதாது விடுக்கின்றோம்.

இனி, குயிலைப்பற்றி இந்தியாவின் மேற்புறப் பகுதிகளில் வழங்கும் ஒரு பழங்கதை யுண்டு. அஃதாவது :—

தக்கன் என்னும் மலையரசன் தான் செய்த ஒரு பெரும் வேள்விக்குத் தன் மகள் பார்வதி தேவியாரையும் அவளது கணவன் பரமசிவனையும் அழைக்காது விடுத்தான்.

இது கண்டு பார்வதி தேவியார் வெகுண்டு நேரே தன் தந்தையரிடம் சென்று பலவாறு கோபித்துக்கொண்டார். அதற்கு மறுமொழியாகத் தக்கன் தன் மருமகனான பரமசிவன் காளிகள் கூளிகள் பேய்கள் ஓரிகள் இவற்றோடு பழகி வருவதால் அவனை வரவழைக்க மறுத்ததாகக் கூறினான். இதன்மேல் தந்தைக்கும் மகளுக்கும் வாக்குத் தடித்துப் பூசல் நேர, சின மிகுதியில் தேவியார் வேள்வித் தீயில் விழுந்து இறந்தார்.

இவ்வாறு விழுந்து வேள்வித் தீயின் பரிசுத்தத்தைக் கெடுத்ததற்காக அவள் ஆயிரம் தேவ வருடங்கள் குயிற் பறவையாகப் பிறந்து காலந் தள்ளவேண்டுமென்றும் அதன் பிறகு தன்னுருவடைந்து தன்னைச் சேர வேண்டுமென்றும் பரமசிவன் சபித்தார் என்பதே.

இப் பழங்கதை ஒருபுற மிருக்க, இதனையே அடிப்படையாகக் கொண்டு எழுந்துள்ள ஒரு மகளிர் வழக்கமும் மேற்குப் பகுதியில் காணப்படுகிறது. அதற்குக் "கோகில விரதம்" என்று பெயர்; அது கொண்டாடப்படுவது பின்வருமாறு:—

ஆடிமாதப் பௌர்ணமி யன்று அதிகாலையில் இந்தியப் பெண்மணிகள் எழுந்து நீராடிக் கோயில் வலம் வந்து வீடு திரும்புவார்கள். அதன்பின் இரத்தினங்கள் இழைத்த கண்களும் வெள்ளியினாற் செய்த கால்களும் உடைய ஒரு பொற் குயிலுருவத்தை வீட்டில் வழிபடுவார்கள். இவ்வுரு அமைத்துக் கொள்ள முடியாதவர்கள் எள்ளுப்பொடியினால் அஃதேபோல் ஓருரு அமைத்துக்கொண்டு வழிபடுவார்கள். உயிர்க் குயிலையே தேடிப் பெற்று வழிபடுவாரும் உளர். அன்று முழுதும் அவர்கள் எவ்வுணவும் உட்கொள்ளாம லிருந்து மாலையில் ஒரு வேளை உண்பார்கள். அவ்வாறு உண்பதும் அன்றைப் பொழுதிற்குள் குயில் கூவும் ஒலி ஒரு முறையாவது அவர்கள் காதுகளில் விழுந்திருந்தால் தான். இன்றேல் அவ்வொரு முறைகூட உணவு கொள்ளல்கூடாது. இவ் விரதம் இவ்வாறு ஒரு மாத காலம் தொடர்ச்சியாகக் கொண்டாடப்படுவதும் உண்டு.

காலஞ்சென்ற ஆசிரியர் மணி. திருநாவுக்கரசு முதலியார்

அவர்கள் சிறுவர்களுக்காகப் பாடிய அருமையும் உருக்கமும் வாய்ந்த குயிற் பாட்டிலே ஒன்றைப் பின் தந்து இக் கட்டுரையை முடிப்பாம்.

“ அன்னையவன் அப்பனவன் ஐயனவன் நண்பனவன்
பொன்னினுஞ்சீர் மணியினினும் பொலிவுடைய பொற்குயிலே!
இன்னுயிருக் குயிராக இலங்குமொரு பெருமானை
மன்னவனே வாவென்று மனமுவந்து கூவாயே!”

---

# *மேனாட்டு ஆசிரியர்கள் தமிழுக் களித்த ஆதரவு

[தமிழ் இலாகா பேராசிரியர் திரு. ஆர். பி. சேதுப்பிள்ளை அவர்கள்]

“இவ்வுலகில் வழங்கும் செம்மை சான்ற தொன்மொழிகளுள் தமிழ் மொழியும் ஒன்றென்று மொழித்திற மறிந்தோர் கூறுவர். இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, நெடியோன் மலையை வட எல்லையாகவும், குமரித் துறையைத் தென் எல்லையாகவும் கொண்டு திகழ்ந்த திருநாட்டில் தமிழ்மொழி தோன்றி வளர்ந்த வரலாறு அன்று தொட்டு இதுகாறும் புதை பொருளாகவே அமைந்துள்ளது. ஆயினும் இக்காலத்தில் வெளிவந்துலவும் பழந்தொகை நூல்களைத் துணைக்கொண்டு துருவி ஆராயும்பொழுது, அக்காலத்திய அந்தணரும், அரசரும், வணிகரும், வேளிரும் வளமார்ந்த தமிழ் மொழியை ஆதரித்து வளர்த்த ஆர்வம் பளிங்குபோல் விளங்குவதாகும். இவ்வாறு புலனழுக்கற்ற அந்தணாளரும், புவிச் செல்வம் படைத்த பெருவேந்தரும், பண்டமாற்றுப் பணிசெய்த வணிகரும், பழுதற்ற வேளாண்மையில் பண்புற்ற வேளிரும், இன்னோரன்ன பிறரும் மனமிசைந்து வளர்த்தமையாலேயே தமிழ்மொழி முற்காலத்தில் தழைத்தோங்குவதாயிற்று. இன்னும் பிறவா யாக்கைப் பெரியோனை வழிபட்ட

---

* அண்ணாமலைச் சர்வ கலாசாலையின் ஆதரவில் நடந்த கூட்டம் ஒன்றில் நிகழ்த்திய சொற்பொழிவு.

சைவரும், நீலமேனி நெடியோனை வழிபட்ட வைணவரும், பூமலி யசோகின் புனைநிழ லமர்ந்த அருகனை வழிபட்ட சமண ரும், போதிமரத்தடியி லமர்ந்த புனிதனை வழிபட்ட புத்தரும், பைந்தமிழ் மொழியைப் போற்றி வளர்த்தார்கள். இங்ஙனம் சாதி மதச் சுழி கடந்து, காலமென்ற கடுந்திரை யாற்றில் தமிழ்க்கலம் களித்துலாவிற்று.

## தமிழ்மொழி மேனாடு சென்ற விதம்

இத்தகைய தொன்மை வாய்ந்த தமிழ் மொழியைச் சென்ற இருநூறாண்டுகளாகப் பிறநாட்டு நல்லறிஞர் போற்றி வளர்க்கத் தலைப்பட்டார்கள். அறநூல்களிற் சிறந்த திருக்குறளை யும், அறச்சுவை நிரம்பிய பெருங் காவியங்களையும் ஆர்வ முறப் பயின்றபொழுது, அந்நூல்களின் தெள்ளிய சுவை அன் னார் உள்ளத்தை அள்ளுவதாயிற்று. இத்தகைய மேனாட் டறிஞ ருள், இத்தாலியா நாட்டினின்றும் தமிழகம் போந்து, தமிழ் மக்களோடு கலந்துறைந்து, விழுமிய புகழ்பெற்ற வீரமா முனி வரே தலைசிறந்தவ ராவர். ஐரோப்பிய நாடுகளில் உயர் தனிச் செம் மொழிகளாகக் கருதப்படும் இலத்தீன், கிரீக் முதலிய மொழி களில் அமைந்த செழுங்கலைகளைச் செவ்வையாய் ஓதி உணர்ந்து, செல்வத்துட் செல்வமாகிய செவிச்செல்வம் பெற்ற இம் முனி வர், அருந்தமிழ் மொழியின் அகலங் காண விரும்பிப் பல் லாண்டு முயன்று பயின்றனர். அறம் மணக்கும் திருக்குறளின் அருஞ்சுவையையும், தமிழ் மணக்கும் சிந்தாமணியின் செழுஞ் சுவையையும், கலை மணக்கும் கம்பன் கவிச்சுவையையும் கலந்து நுகர்ந்த முனிவர் உள்ளம், பள்ளத்துட்பாயும் வெள்ளம்போல், மற்றைய தமிழ்ப் பனுவல்களிலும் பரந்து படர்வதாயிற்று.

## தமிழ் அகராதியைச் செய்த தந்தை

தைரியநாதர் என்றும் வீரமாமுனிவர் என்றும் தமிழகத் திற் புகழ்பெற்ற இவ்வறிஞரே, தமிழ் அகராதியின் தந்தை யாவர் என்று கூறுதல் மிகையாகாது. தமிழ் மொழியில் அமைந்த சொல்லின் பொருளை அறிந்துகொள்வதற்கு முற் காலத்தில் நிகண்டுகளே சிறந்த கருவிகளா யமைந்தன. இங்

நிகண்டுகள் யாவும் பாக்களால் அமைந்திருந்தமையால், அவை கற்றோர்க்கேயன்றி மற்றோர்க்குப் பயன் படாதனவாயின என்பது சொல்லாமலே அமையும். கற்றோரையன்றி, மற்றோரும் தமிழின் நீர்மை யறிந்து தழைத்தோங்க வேண்டுமென்று கருதிய வீரமாமுனிவர் "சதுர் அகராதி" என்னும் பெயரால் ஓர் சிறந்த அகராதி செய்து உதவினார். இவ் வகராதி பதினெட்டாம் நூற்றாண்டில் எழுந்ததாகும். இஃது, உருவிற் சிறிதேனும் அருமை மிக வாய்ந்த தென்பதில் ஐயமில்லை.

## பலவித அகராதிகள் எழுந்த வரலாறு

இச்சதுர் அகராதியை அடிப்படையாகக் கொண்டு தனித்தனி அகராதிகளும், தமிழ் ஆங்கில அகராதிகளும் எழுந்தன. விவிலிய நூலைப் பரப்பும் விழுமிய நோக்கத்துடன் இந்நாட்டில் நிறுவப்பட்ட வேதமடத்தைச் சார்ந்த ராட்லர் என்னும் நல்லறிஞர் பல்லாண்டுகளாகத் தமிழறிந்தோரைத் துணைக்கொண்டு உழைத்து ஓர் தமிழ் ஆங்கில அகராதி தொகுத்தார். இவ்வகராதி நான்கு பகுதிகளாக வேதமடத்தினரால் 1836-ம் ஆண்டு முதல் வெளியிடப் பெற்றது.

## தமிழ் ஆங்கில அகராதியின் உண்மை

இவ்வகராதியைத் தழுவி விரிவாக எழுந்த வின்சுலோ அகராதியே இன்றுகாறும் சிறந்த தமிழ் ஆங்கில அகராதியாக நின்று நிலவுகின்றது. இனி, இப் பேரகராதியைப் பின்பற்றிச் சென்னைச் சர்வ கலா சங்கத்தின் ஆதரவில் ஓர் புதிய தமிழ் ஆங்கில அகராதி வெளியிடப்பட்டு வருகின்றது. ஐந்தாண்டளவில் முற்றுப் பெறுமென்று அரசாங்கத்தார் கருதிய இப்பேரகராதி 1923-ம் ஆண்டு தொடங்கி இன்றளவும் இடையீடின்றி நடந்து வருகின்றது. ஒன்பதாண்டுகள் இதன் பதிப்பாளராய் அமர்ந்து பணிசெய்த சாண்ட்லர் என்பார் எழுபதாம் வயதில் இளைப்பாறக் கருதி வேலையினின்றும் விலகிக்கொண்டார். இவ்வகராதியின் உரிமையை அரசாங்கத்தார் சென்னைச் சர்வ கலா சாலைக்கு அளித்துள்ளார்கள்.

## வீரமா முனிவரின் மற்றைத் தமிழ்க் கிரந்தங்கள்

இனி, தமிழ் அகராதியின் தந்தையாகிய வீரமாமுனிவர் தமிழ் உலகத்தின் அகராதி யொன்றும், போர்ச்சிகீசியத் தமிழ் அகராதி யொன்றும் இயற்றிச் சிறப்புற்ற முனிவர். தேம்பாவணி யென்னும் நறுந்தமிழ் மாலை புனைந்து தமிழணங்கைப் போற்றுவாராயினர். சூதேய நாட்டிற் பிறந்து புகழ்பெற்ற சூசையப்பர் என்னும் வளன்பெருமை கூறும் இவ்வளமார்ந்த காவியத்தில் தெய்வத் திருக்குறளின் தெள்ளிய மணமும், சிந்தாமணியின் செவ்விய கற்பனை நலமும், கலைமலிந்த கம்பன் கவிநயமும் ஆங்காங்கு அமைந்து அழகுசெய்யக் காணலாம்.

## இலத்தீன் பாஷையில் திருக்குறள்

அரியதோர் அகராதி தொகுத்தும் அருங்காவியம் இயற்றியும் தண்டமிழ் மொழிக்குத் தொண்டு செய்த வீரமாமுனிவர், நன்னூல் முதலிய பன்னூல்களையும் ஐயந்திரிபற ஓதி உணர்ந்து, தொன்னூல் விளக்கம் என்னும் பெயரால் ஓர் செந்தமிழ் இலக்கணம் செய்தருளினார். மற்றும், பழம் பெருமை வாய்ந்த தமிழ் மக்கள் பண்பினை இத்தாலிய நாட்டினரும் இனிதுணருமாறு தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் இயற்றிய திருக்குறளின் அறத்துப்பாலையும் பொருட்பாலையும் வீரமா முனிவர் இலத்தீன் பாஷையில் மொழிபெயர்த் தமைத்தார்.

## மேனாட்டினருக்குத் தமிழில் ஏற்பட்ட சுவை

வீரமா முனிவர் காலத்திற்குப் பின்னர் பல ஐரோப்பிய அறிஞர் தமிழ்மொழியின் பல துறைகளையும் ஆராய்ந்து அறியத் தலைப்பட்டார்கள். மொழிநூல் முறையில் தமிழ்மொழியை ஆராய்ந்து அதன் தனிப் பெருமையை உணர்த்தினார் சிலர். தமிழகத்தில் முற்காலத்தில் வழங்கிய வட்டெழுத்தின் வரலாற்றையும் பிற்காலத் தமிழ் எழுத்தின் வரலாற்றையும் ஆராய்ந்து தமிழின் தொன்மையை வழங்கினார் சிலர். ஆழநெடுந்திரை ஆழிவாய்ப்பட்ட பழந்தமிழ் நாட்டின் சிறப்பையும் பரப்பையும் ஆராய்ந்து அறிவித்தார் சிலர். கல்லிலும் செம்பிலும் அமைந்த சாசனங்களைக் கற்றும், மண்ணுள் மூழ்கி மறைந்த பழம் பொ

ருள்களை ஆழ்ந்தெடுத்தும் தமிழகத்தின் பழைய வரலாற்றை அறிய முயன்றார் சிலர். தமிழ்மொழியில் அமைந்திட்ட விழுமிய அறநூல்களை மேலைநாட்டு மொழிகளில் மொழிபெயர்த்தார் சிலர்.

## மிஸ்டர் கால்டுவேல்லின் தமிழ்ப் பயிற்சி

பத்தொன்பதாம் நூற்றாண்டில் மேல் நாட்டின் ஒளி வீசுவதாயிற்று. காலையில் எழும் கதிரவன்போல், கால்டுவெல் என்னும் மொழிநூற் புலவர் இந்நாட்டில் தோன்றினார். தென்றமிழ் நாடாகிய திருநெல்வேலியி லமைந்த இடையன்குடியென்னும் சிற்றூரைத் தம் இருப்பிடமாகக் கொண்ட இவ்வறிஞர் உலகவழக்கினும் நூல்வழக்கினும் அமைந்த அருந்தமிழ் மொழியை ஆர்வமுறப் பயின்றார்.

## தென்னாட்டு மொழிகளைப் பயின்ற மேனாட்டினர்

இவ்வாறு கால்டுவெல் தமிழ்மொழியைக் கற்றுவரும் காலத்தில் மலையாள மொழியை டாக்டர் குண்டர்ட் என்னும் மேலைநாட் டறிஞர் மொழிநூல் முறையில் ஆராயத் தலைப்பட்டார். கருநாடக நாட்டில் வழங்கிய கன்னட மொழியை டாக்டர் கிட்டல் என்னும் கலைவாணர் கற்கத் தொடங்கினார். ஆந்திர மொழியை ஆர்டன் முதலிய மேலைநாட்டறிஞர் ஆராயமுற்பட்டார். தமிழ்மொழியின் ஆழத்தையும அகலத்தையும் ஆராய்ந்தறிந்த கால்டுவெல் ஆசிரியர் நாற்றிசையினும் நல்லொளி வீசக் கண்டு மகிழ்ந்தார். தமிழோடு மிகுந்த தொடர்புடைய மலையாள மொழியை முட்டறுத்துக் கற்ற குண்டர்ட் என்னும் மொழிநூற் புலவர் மலையாள இலக்கணமும் மலையாள ஆங்கில அகராதியும் எழுதிப் போந்தார். கன்னட மொழியை நிலைகண்டுணர்ந்த கிட்டல் என்னும் கலைவாணர் தாம் ஆராய்ந்தறிந்த உண்மைகளை அரிய கட்டுரைகளின் வாயிலாக வெளிப்படுத்தினார். ஆந்திர மொழியை ஐயந்திரிபறக் கற்றுணர்ந்த ஆர்டன் என்னும் ஆசிரியர் தெலுங்கு மொழியின் இலக்கணம் தெரிவிப்பாராயினர். இவ்வாராய்ச்சிகளின் பயனாகக் கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் தமிழ்மொழியோடு

நெருங்கிய தொடர்புடைய மொழிகள் என்பது வெள்ளிடை மலே போல் விளங்குவதாயிற்று. இந் நான்கு சிறந்த மொழி களும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளேயாயினும், மிகத் தொன்மையும் செம்மையும் வாய்ந்த மொழி தமிழே என்பது ஆசிரியர் கால்டுவெல் உள்ளத்தில் தெள்ளிதின் விளங்கிற்று.

## கால்டுவெல்லும் தமிழின் மகிமையும்

தென்னாட்டில் வழங்கிவரும் திருந்திய மொழிகளும் திருந்தா மொழிகளும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளே என்று முதல்முதல் கண்டுணர்த்திய பெருமை கால்டுவெல் ஆசிரியர்க்கே உரியதாகும். தமிழ்மொழியின் செம்மையையும் தொன்மையையும் ஐயந்திரிபற ஆராயக் கருதும் அறிஞர் ஏனைய திராவிட மொழியின் இலக்கண அமைதிகளே அறிதல் இன்றி யமையாததென்று இவ்வாசிரியர் வலியுறுத்திப் போந்தார். தமிழ் இலக்கணத்தைத் திட்டமாகவும் நுட்பமாகவும் பயின்ற தமிழறிஞர் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண முணர்வாரா யின் இன்னும் பல நுண்ணிய பொருள்களைத் தெள்ளிதின் உணர்வர் என்று உண்ணின்றெழுந்த உயரிய ஆர்வத்தால் எடுத் துரைத்தார். மேலைநாட்டு மொழிநூல் முறைக் கிணங்க இவ் வாசிரியர் எழுதியமைத்த விழுமிய நூலில் அடிப்படை அன்று போலவே இன்றும் அசைவுறா திருக்கின்றது. ஆயினும், திரா விட மொழிகள் துரானிய மொழிகளோடு தொடர்புடையன வென்று கால்டுவெல் ஆசிரியர் நாட்ட முயன்ற கொள்கை இன்னும் செவ்வையாக நிலைபெறவில்லை யென்று தோன்றுகின் றது.

## திராவிட மொழிகளின் மீது மேனாட்டுப் புலவர்களின் அபிப்பிராயம்

திராவிட மொழிகளின் தத்துவத்தை நன்கு உணர்ந்த கிரேயர்சன் என்னும் மேலைநாட்டு அறிஞர் இம்மொழிகள் முன் னேயோர் வகுத்த மூன்று குடும்பங்களிலும் சேராத ஒரு தனிக் குடும்ப மொழிகளென்று கருதுகின்றார். இன்னும், தென்னாட் டில் வழங்கும் திராவிட தொன்மொழிகளும் கி. மு. 15-ம் நூற்

றுண்டில் அசீரியா முதலிய பழைய நாடுகளில் வழங்கி வந்த மித்துனி என்னும் தொன்மொழியும் தொடர்புடைய மொழி களாம் என்று ப்ரெளன் என்னும் மொழிநூற் புலவர் கூறு கின்றார்.

## தமிழின் தனிச்சிறப்பு

இவ்வாறு தமிழின் தொன்மையைப் பிற நாட்டு ஆசிரியர் கள் எழுதிவைத்த புறச் சான்றுகளால் நிறுவிய ஆசிரியர் கால்டு வெல் தமிழ் மொழியின் தனிப் பெருமையையும் விரித்துரைத்து விளங்க வைத்தார். திருந்திய திராவிட மொழிகளாய தெலுங் கும், கன்னடமும், மலேயாளமும், துளுவமும் வடசொற்களே மிகுதியாகக் கலந்து வழங்குதலால், அவை வடமொழியின் உத வியின்றித் தனித்தியங்கும் ஆற்றல் இழந்துவிட்டன என்றும், தமிழ்மொழி வடசொற்களே வரம்பினுட்படுத்திச் சிறுபான்மை யே வழங்கி வந்தமையால் அம்மொழியின் உதவியின்றியே தனித் தியங்கவும் செழித்தோங்கவும் வல்லதென்றும் செவ்வையாய் உணர்த்திப் போந்தார். அன்றியும், தமிழ் இலக்கணத்தில் உயர்திணை யென்றும் அஃறிணை என்றும் பெயர்களே வகுத்து வழங்கும் பான்மை தமிழ்மொழிக்கே உள்ள தனிச்சிறப்பென்று தக்கவா றெடுத்துரைததார்.

இன்றைக்கு ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் திரா விட மொழிகளின் ஒப்பிலக்கண மென்னும் உயரிய நூலியற்றித் தமிழ்மொழிக்கு ஒப்பற்ற உதவி செய்த கால்டுவெல் ஆசிரியர் கருத்துக்களேச செவ்வையாக ஆராய்ந்து பழையன கழித்துப் புதியன புகுத்திப் பழந்தமிழ் மொழிக்குப் பணிசெய்தல் கற் றறிந்தோர் கடமையாகும்.

இனி, தமிழ் எழுத்து வகையை ஆராய்ந்த டாக்டர் பர் னல் முதலியோரையும், சாஸனங்களே ஆராய்ந்த டாக்டர் ஹல்ஸ் முதலியோரையும், நிலநூல் ஆராய்ந்த ஸ்காட் எலி யெட் முதலியோரையும், தமிழ் நூல்களேப் பிற மொழிகளில் மொழி பெயர்த்த போப் முதலிய பெரியோரையும், இவர் போன்ற பிறரையும் பின்னர் ஆராய்வோம். (சிவநேசன்.)

# கடவுளும் காந்திப் பெரியாரும்

[திருவாளர் மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள்]

உலகில் எல்லாப் பொருள்களையும் ஊடுருவி மறைந்து நிற்கும் சொல்லொண்ணாத சத்தி ஒன்று உளது. அந்தச் சத்தியை நான் கண்ணாற் பார்க்காவிட்டாலும் நெஞ்சினால் உணருகிறேன். காணக் கூடாததும் உணரக் கூடியதுமான இந்தச் சத்தியானது அளவை யறிவினால் மெய்ப்பிக்கக் கூடாதது; ஏனென்றால் அது ஐம்புலன்களால் அளந்தறியக் கூடிய பொருளன்று; அஃது ஐம்புலன்களைக் கடந்தது. ஆனால் ஒரு அளவுபட்ட எல்லையில் கடவுள் உண்டு என்னும் உண்மையை நாம் அளவை யறிவினால் ஊகித்து அறியக்கூடும்.

சாதாரண காரியங்களிலுங்கூட, மக்கள் தங்களை ஆளுகிறவர் யார் என்றும், எதற்காக ஆளுகிறார் என்றும், எப்படி ஆளுகிறார் என்றும் தெரியாதவர்களா யிருக்கிறார்கள்; அவ்வாறு அவர்கள் தெரியாதிருந்தாலும் தங்களை உறுதியாய் ஆளுகிற சத்தி ஒன்று உளது என்று அவர்களுக்குத் தெரியும். நான் மைசூர் நாட்டில் செய்த சுற்றுப்போக்கில் (சுற்றுப் பிரயாணத்தில்) சிற்றூர் மக்களைச் சந்தித்துக் கேட்டபொழுது மைசூர் நாட்டினை ஆண்டவர் யார் என்று அவர்களுக்குத் தெரியவில்லை; தங்களை யாரோ ஒருவர் ஆண்டு வந்தார் என்று மாத்திரம் அவர்கள் சொன்னார்கள். இந்த ஏழை மக்களுக்குத் தங்களை ஆண்ட அரசரைத் தெரியாது என்றால் அவர்கள் தங்கள் அரசருக்குக் கீழாயிருப்பதைப் பார்க்கிலும் எத்தனையோ மடங்கு அளவிடக் கூடாத அளவில் கடவுளுக்குக் கீழாயிருக்கிற நான் அரசர்களுக்கெல்லாம் அரசனா யிருக்கிற கடவுளை அறியாதிருப்பது வியப்பன்று.

நான் கடவுளை அறியாதிருந்தபோதிலும், மைசூர் நாட்டிலுள்ள சிற்றூர் ஏழை மக்கள் தங்களை ஆண்ட ஒருவர் உண்டு என்று உணர்ந்திருந்ததுபோல உலகிலிருக்கிற எல்லாப் பொருள்களையும், வாழ்கிற எல்லா உயிர்களையும் ஆண்டு வருகிற

ஒரு மாற்றக் கூடாத சத்தி உண்டு என்று உறுதியாய் உணருகிறேன். அந்தச் சட்டம் ஒரு அறிவில்லாத சட்டம் அன்று; ஏனென்றால் ஒரு அறிவில்லாத சட்டமானது எல்லா உயிர்களையும் ஒரு கட்டுக்கு உட்படுத்தி ஆளுதல் செய்ய முடியாது. சர். ஜே. சி. போஸ் என்ற அறிஞருடைய ஆச்சரியமான ஆராய்ச்சியால் உலகில் உயிரில்லாதனவாகத் தோன்றுகிற இயற்கைப் பொருள்களும் உயிருடையன என்பது மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

உயிருள்ள எல்லாப் பொருள்களையும் ஆண்டு வருகிற சட்டம் எதுவோ அதுவே கடவுளாகும். சட்டமும் சட்டத்தைச் செய்கிறவரும் ஒன்றே. சட்டத்தையாவது சட்டத்தைச் செய்தவரையாவது நான் சிறிதும் அறியாமலிருப்பதனால் சட்டமும் சட்டம் செய்தவரும் உண்டு என்பதை மறுக்காமலிருக்கலாம் உலகில் ஒரு சத்தி உண்டு என்பதை அறியாமையினாலாவது மறுப்பதினாலாவது யாதொரு பயனும் எனக்கு உண்டாகாததுபோலக் கடவுளையும் கடவுளுடைய சட்டத்தையும் இல்லை என்று நான் மறுப்பதினாலே கடவுளுடைய ஆளுகையிலிருந்து அல்லது கடவுளுடைய சட்டத்தினது ஆளுகையிலிருந்து விடுதலை பெறமுடியாது. ஆனால் உலகிலுள்ள ஒரு சத்தியை ஒப்புக்கொண்டு அதற்கு உட்பட்டு நடத்தல் எனது உலக வாழ்க்கையை நடத்துதற்கு எளிதாயிருத்தல் போலக் கடவுளையும் கடவுளுடைய சட்டத்தையும் தாழ்மையாயொப்புக்கொண்டு அச் சட்டத்துக்கு உட்பட்டு நடத்தல் எனது வாழ்க்கைப் போக்கை எளிதாக்கி விடுகிறது.

என்னைச் சுற்றி யிருக்கிற எல்லாப் பொருள்களும் எப்பொழுதும் மாறிக்கொண்டும் அழிந்துகொண்டும் இருக்குங்கால் அந்த மாறுதலுக்கும் அழிதலுக்கும் காரணமாயுள்ள உயிர்ப்பொருள் ஒன்று எல்லாவற்றையும் படைத்துக்கொண்டும், காத்துக்கொண்டும், அழித்துக் கொண்டும், அழிந்த பொருள்களைத் திரும்பப் படைத்துக்கொண்டும் இருத்தலை நான் மங்கலாய் அறிகிறேன். இப்படிச் செய்வது எந்தச்

சத்தியோ அந்தச் சத்தியே கடவுள். நான் எனது புலன்களால் அறியக்கூடிய எந்தப் பொருளும் நிலைத்திருப்பதும் நிலைத்திருக்கக் கூடியது மல்லாததா யிருப்பதால் கடவுள் ஒருவரே நிலையா யிருப்பவர்.

மேலே சொன்ன இந்தச் சத்தியானது நன்மை செய்யும் சத்தியா அல்லவா? அது நன்மையே செய்யும் சத்தி என்று நான் அறிகிறேன்; ஏனென்றால் சாவினிடையில் உயிரும், பொய்யினிடையில் மெய்யும், இருளினிடையில் ஒளியும் நிலையா யிருத்தலை நான் அறிகிறேன். கடவுளை உயிர் என்றும், உண்மை என்றும், ஒளி என்றும் நான் அறிகிறேன். கடவுளே அன்பு; அவரே ஒப்பற்ற மேலான பொருள்.

உலக அறிவுக்கு மாத்திரம் பொருத்தமா யிருக்கிறவர் கடவுளாக மாட்டார். கடவ்ளா யிருக்கிறவர் நெஞ்சத்தையு மாண்டு அதனைக் கனியச் செய்கிறவரா யிருத்தல் வேண்டும். அவருடைய அருள் நமது அடியார்களுடைய ஒவ்வொரு சிறிய செயலினும் விளங்குதல் வேண்டும். இந்த அருள் விளக்கமானது ஐம்புலன்களால் உண்டாவதன்று. அது திட்டமான உள்ளுணர் வாட்சியினாலேயே உண்டாதல் வேண்டும். புலனுணர்ச்சிகள் மேற்பார்வையில் எவ்வளவு உண்மையாய்த் தோற்றினும் உண்மையில் பொய்யாகவும் ஏமாற்ற முடையவையாகவும் இருக்கின்றன. புலனுணர்ச்சிகளைக் கடந்து ஒருவர் தன்னுள்ளே உணர்வதாகிய உள்ளுணர்வே நமக்குப் பிழைபடாத உண்மையா யிருக்கின்றது. அப்பேர்ப்பட்ட உள்ளுணர்வானது வெளிச் சான்றுகளால் மெய்ப்பிக்கப்படாது அது தம் உள்ளத்தினுள்ளே கடவுளுடைய இருப்பை உணர்கின்ற அடியார்களுடைய அருள் பழுத்த ஒழுக்கத்தாலும் பண்பினாலும் மெய்ப்பிக்கப்படுகின்றது.

அத்தகைய சான்றுகள் உலகிலுள்ள எல்லா நாடுகளில் வாழையடி வாழையாய் வந்துள்ள முன்னறிந் துரைப்பவர்களும் (தீர்க்கதரிசிகள்) மெய்யறிஞர்களும் அடைந்த பழக்க அறிவினால் (அநுபவத்தால்) பெறப்படுகின்றன. அச்சான்று

களை எல்லாம் பொய்யெனத் தள்ளுதலானது ஒருவர் தாம் இருப்பதையே இல்லை என்று சொல்லுதல் போல்வது.

இந்த நுண்ணுணர்வாட்சி நிலை பெயராத அன்பின் வழித் தாய் உண்டாகும். கடவுள் உண்டு என்பதை ஒருவர் தமக்குள்ளே வைத்த அயரா அன்பினால் அறிந்துகொள்ளலாம். ஒருவர் நெஞ்சில் உணரும் அன்பு வெளிச் சான்றுகளால் மெய்ப்பிக்கப்படக் கூடாமையால் உலகமானது அறநெறி ஆட்சிக்குள் ளிருத்தலையும் அதுபற்றி உண்மையும் அன்பும் அடங்கியுள்ள அறநெறிச் சட்டத்தினது மேன்மையையும் நம்பி ஒழுகுதலே நேர்மையுள்ள வழியா யிருக்கிறது. உண்மைக்கும் அன்புக்கும் மாறுயுள்ளவைகளை யெல்லாம் பொய்யெனத் தெளிந்து விலக்குகின்ற கருத்து உடையவர்களுக்கு அன்பின் வழி நிற்றலே தவறுதலில்லாத வழியாகும்.

கடவுள் உண்டு என்று உலக அறிவு வழியில் காரணம் சொல்லி மெய்ப்பிக்க என்னால் முடியாது என்று நான் ஒப்புக் கொள்கிறேன். அன்பு (பக்தி) உலக அறிவைக் கடந்து நிற்கிறது. மெய்ப்பிக்க முடியாத தொன்றை மெய்ப்பிக்க முயல வேண்டாம் என்றே நான் சொல்லுகின்றேன்.

உலகில் தீமை உளதாவதற்கு நான் உலக அறிவு வழியில் யாதொரு காரணமும் சொல்ல முடியாது. தீமை இருத்தலுக்குக் காரணம் சொல்ல விரும்புவது தாங்கள் கடவுளுக்கு ஒப்பானவர்கள் என்று சொல்லுதல் போல்வது. ஆதலின் நான் உலகில் தீமை உள்ளது என்பதைத் தாழ்மையுடன் ஒப்புக் கொள்கிறேன். கடவுள் உலகில் தீமை நிலவுவதற்கு இடம் கொடுத்தலினாலேயே நான் அவரைத் துன்பத்தை நீக்கும் பொறுப்புடையவர் என்றும நினைக்கிறேன். கடவுள் தம்மிடத்தில் யாதொரு தீமையும் உடையர் அல்லர் என்பது எனக்குத் தெரியும். கடவுள் தீதொன்று மில்லாதவரா யிருந்தாலும் அவர் தீமைக்குக் காரணராயும், காரணரா யிருந்தும் அதனாற் பற்றப்படாதவராயு மிருக்கிறார்.

எனது உயிருக்குக் கேடு வரினும் அதனைப் பொருட்படுத்

தாது தீமையுடன் இகலி அதனை எதிர்க்காவிட்டால் நான் கடவுளை அறியவே முடியாது என்பதும் எனக்குத் தெரியும். என்னுடைய தாழ்மையானதாயும் அளவுபட்டதாயுமுள்ள பழக்க அறிவின் பயனாக நான் இந்த உண்மையை உறுதியாய் நம்பியிருக்கிறேன். நான் எவ்வளவுக்கு எவ்வளவு தூய்மை அடைகிறேனோ அவ்வளவுக்கு அவ்வளவு நான் கடவுளுக்கு அருகி லிருப்பதாக உணர்கின்றேன். கடவுளிடத்தில் எனக்கு உள்ள அன்பு இப்பொழுது இருத்தல்போலப் போலியா யிரா மல் இமயமலைகள் போல அசைக்கக் கூடாததாயும், அவைகளு டைய சிகரங்களில் உறைந்திருக்கிற பனிக் கட்டிகளைப் போல அழுக்கில்லாத வெண்மையான தூய்மை உடையதாயு மிருப் பின் நான் இன்னும் எத்துணை கடவுள் அருகில் இருப்பேன்!'.

---

# இறந்த நாட்கள்

[திருக் கபசம் எழுதியது]

கழிந்த நாட்கள் திரும்பி வாரா; அவற்றைப் பற்றிய நினை வோ மாய்வதில்லை. "இறந்ததைப்பற்றி நினைப்பது வீண்; வரு வதைக் குறித்துக் கனவு காண்பதும் வீண்; இன்றைப் பொழு தை ஏற்றவாறு வழங்குவதே நன்று" என்று சொல்வாருளர். இது தவறென்று யாம் சொல்லவியலாது. ஆயின், இறந்த நாட் களைப் பற்றி நினைப்பது தவறோ? எனின், அதுவுந் தவறன்று. அளவு கடந்து இறந்ததை நினைந்து ஏங்குவதும், வருவதை எண்ணிக் காலத்தைக் கழிப்பதும் இழுக்காம். அளவுபட இறப்பையும் எதிர்வையுங் குறித்து அவ்வப்போது நினைத்தல் பயனளிக்கக் கூடியது. இறந்ததை முற்றும் விலக்க வேண்டு மென்போமாயின் நினைவென்பதையே ஒழிக்க வேண்டும்.

நினையாத நேரங்களில், ஒரு மணத்தால், காட்சியால், ஒலி யால், ஒருவரது சொல்லால், எனது உளம் நிகழ்காலத்திலிருந்து நீங்கி, இறந்த எனது இளமைக்குச் செல்கின்றது. வாழைப்

பூவின் மணமும், இளஞாயிறு புல்வெளிகளிற் காயுங் காட்சியும், மடைகளில் ஓடும் நீரின் ஓசையும் முப்பத்தைந்து ஆண்டுகட்கப்பால் என்னைத் தூக்கிக்கொண்டு செல்கின்றன. இளமை மீதோடிய உளம் எளிதில் அதை விட்டு நீங்குகின்றிலது. என்னை யான் மறந்து ஓர் இளைஞனாகிவிடுகின்றேன். உளத்தில் இத்துணை எளிதாகத் திரும்பி வருகின்ற இளமை அவா, உடலினுந் தோன்றுமாயின எவ்வளவு நன்றாயிருக்கும்! மலைச்சாரல்களிலுங் குளக்கரைகளிலும் உணவையும் மறந்து ஓடித் திரிந்தவாறு, இன்றும் எனது கவலைகளை மறந்து யான் கும்மாளம் போடக் கூடுமாயின், இறைவனே, உன்னை யான் வாழ்த்தேனோ? உயிருடனிருப்பதே ஓர் இன்பமாயிருந்த அவ்விளமையின் மாட்சி என்னே! என்னே!

'மடமகனே, உளத்தில் திரும்பி வருகின்ற இளமை உடலினுந் தோன்றுமாயின் நன்றாயிருக்குமென்று எங்ஙனந் துணிந்து சொல்வாய்? மறுபடியும் இளமை வருமாயின், முன்னைவிட நேர்மையான முறையி லதை நீ வழங்குவாயென்ற உறுதி என்னை? இளமையுடன் அறியாமையுந் திரும்பி வரவேண்டுமன்றோ? நீ பெற்ற கல்வியையும் நுகர்ச்சியையும் நீக்கி இளமை மட்டும் பெறுவதால் பெரிய பயனொன்றும் வராது' என்று எனது உளமே சொல்கின்றது. நன்று; ஆயினும், கல்வியும் நுகர்ச்சியும் இளமையின் உணர்ச்சிகளைப் பொன்போற் போற்றாவிடின், அவற்றை நீக்கி இளமை பெறுவதே சிறந்ததென்று தோன்றுகிறது. இதன் காரணத்தைப் பின்னர் மொழிவாம்.

இறந்த நாட்களைப்பற்றி நினைக்குங்கால், அரிய காலத்தைக் கொன்னே கழித்த மடமையும், பொன்னனைய தருணங்களைக் கைநழுவவிட்ட பேதமையும், நெறி தவறி நடந்த வெட்கமும் உளத்தில் தோன்றியே தீரவேண்டும். இளமையிற் சிறுமை இயல்பே. முதுமையில் இளமையைக் குறித்து எண்ணும் பொழுது பெரும்பாலும் நமது நினைவு நமது தவறுகள் மீதும் புன் செயல்கள்மீதும் செல்வதில்லை. காலப் போக்கின்

வியத்தகு தன்மைகளுள் இதுவொன்று. இறந்த காலத்தில் நிகழ்ந்தவற்றுள், எவை நமக்கு இன்பத்தையும் அமைதியையுந் தருகின்றனவோ அவற்றின் மேலேயே நமது நினைவுகள் உறைகின்றன. நாம் செய்த பிழைகளும், நாணுதற்குரிய செயல்களும் நாளாவட்டத்திற் குறைந்து மறைகின்றன. எல்லா உயிர்கள் மேலும் ஓவா விரக்கங் கொண்ட செம்பொருள் மக்கட்கீந்த பேருதவிகளில் ஒன்றாக இதை நாம் கருதவேண்டும். ஏனெனின், எள்ளுதற்கும் நகுதற்குமுரிய செய்திகளைப்பற்றிய நினைவு, அச்செய்திகளை நாமியற்றியகாலை எத்துணை ஆற்றலுங் கூர்மையு முடையதா யிருந்ததோ அத்துணை ஆற்றலுடனுங் கூர்மையுடனும் முதுமையில் தோன்றுமாயின், வாழ்க்கை என்பதே ஒரு பாடாக முடியும்; நினைவென்பதே தாங்குதற்கரிய ஒரு தீங்காகும். காலங் கழியக் கழிய வாழ்க்கையின் பள்ளங்கள் நிரப்பப்பட்டு, மேடுகள் முன்னினும் உயர்ந்து விளங்குகின்றன.

அயல் வீட்டிற் கொடுத்த தின்பண்டத்தை உண்டதோடமையாது, அதிலொரு பகுதியைக் கையில் வைத்துக்கொண்டு வீட்டிற்கு வர, அன்னை கண்டு வெகுண்டு செங்கோல் செலுத்தியதும்; விடுமுறைக்கு வீட்டிற்கு வந்த யான் திரும்பவும் பள்ளி செல்ல மறுத்தபொழுது தந்தை தாண்டவம் புரிந்ததும்; அக்காலை எனது சிற்றுளம் பொறுத்தற்கரிய துன்பத்தி லாழ்ந்ததும்; பதினைந்து, பதினாறாண்டில் பள்ளி நண்பர் சிலரது தூண்டுதலாற் பகர்தற்கரிய தீச் செயல்கள் புரிந்ததும்; அதற்குமேல் நடந்த நாணுதற்குரிய நடக்கையும்; இப்பொழுது முன்போல் உளத்தைப் புண்படுத்தவில்லை. இவைகளைப் பற்றிச் சில வேளைகளில் விளையாட்டாகப் பேசவும் உளம் இசைகின்றது. இன்னுஞ் சில நாட் சென்றபின் இவை கருத்திலிருந்து நீங்கினும் நீங்கும். இவை போன்றவற்றையே வாழ்க்கையின் பள்ளங்கள் என்று முன்கூறியது.

ஆனால், முதன்முதற் கடலைக் கண்டபோது என் உளங் குதித்தெழும்பிக் கரைகாணா வின்பமும், ஆழமறியா அச்சமும்

எய்தியதும்; இலைகளின்றி மலர் இணர்கள் நிறைந்து செவ்வானம்போல் தோன்றிய ஒரு முருக்க மரத்தைக் கண்டு சொல்லொணாத ஓர் உணர்ச்சி மேலிட்டு யான் கூத்தாடியதும்; எனது பள்ளிக்கூடக் காற்பந்து விளையாட்டுக் குழுவின் (Foot ball team) தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பந்தயத்தில் யான் முதன்முதற் பெற்ற வெற்றியின் உவகையும்; அதுகாலை எனது தோழர்கள், சண்டையில் வென்ற சேவல் வீட்டுக் கூரையில் ஏறி நின்று கூவுவதுபோல் தொண்டை சுவறக் கூவி வெறித்தவர்போல் குதித்ததும், இப்பொழுது முன்னைவிட அதிக இன்பத்தைத் தருகின்றன. இவற்றின்மேல் உளம் ஆவலுடன் செல்கின்றது. இவை போன்றவற்றையே வாழ்க்கையின் உயரங்கள் என்று முன் சொன்னது.

இறந்த காலத்திற்கும் நிகழ் காலத்திற்கும் நடுவே இடைவெளியொன்றுமில்லை ஆதலின் முதுமையில் ஒருவர் இளமையிலிருந்து நீங்கி நிற்கவேண்டிய காரணமே கிடையாது. எவர்களுடைய முதுமை இளமையோடு ஒட்டி இருக்கிறதோ அவர்களே ஞாலத்திற்கு நன்மை செய்யக்கூடியவர். எங்ஙனமெனின், மக்களெல்லோரும் ஒரு கூட்டத்தவர் என்பது இளமையிற் கல்வியினுதவியின்றி நம்மாலுணரப்பட்டது. ஒரு பிள்ளை மற்றொரு பிள்ளையையுந் தன்னைப் போலவே நினைக்கிறது. பிள்ளைகள் ஒருவர் அழுவதை ஒருவர் கண்டு அழுகிறார்கள். பிறருடைய நன்மை தீமைகளைத் தங்களுடைய நன்மை தீமைகளாகக் கருதுவது இளமையில் இயற்கையாகவே அமைந்துகிடக்கிறது. இளைஞர்கள் வறுமையாலுஞ் செல்வத்தாலும் வரும் வேற்றுமைகளை அறியார். கனிந்திருக்கும் இளைஞனது உளம் முதுமையிலன்றோ கல்லாகி விடுகிறது? இறந்த நாட்களைப் பற்றி நன்கு நினைந்து பார்மின்.

தமது நாட்டிற் பெருந் தொகையினரான மக்கள் சாலக் கடிதில் முதுமை யடைந்துவிடுகின்றனர். முதுமை யடைவதுமன்றி இளமையின் உணர்ச்சிகளை அவர்கள் விரைவில் மறந்துவிடுகின்றனர். இது நமது நாட்டின் வெப்ப தட்ப நிலையாலாவ

தென்று கூறுதல் கூடும். ஆயின், இதுமட்டும் போதிய காரண மாகாது. நமது பயிற்சியும் பழக்கங்களும் இதற்குத் துணை யாகின்றன. இது பற்றி விரித்துக் கூறப் புகின் இக் கட்டுரை யின் நோக்கம் சிதையும்.

இளமையில் வையகம் நமக்கு எவ்வளவு இனிதாய்த் தோன்றியது! புல்லும், பூவும், மரங்களும், மலையுங், குன்றுந், தோப்பும் சொல்லரிய அழகுடையனவாயும் நம்மைத் தம் பால் ஈர்க்குந் தன்மையுடையனவாயு மிருந்தன. இத்தன்மை இப்பொழுது யாண்டுச் சென்றது? கடலும் வெளியும் விண் ணும் ஞாயிறுந் திங்களும் முன்போலவேதா னிருக்கின் றன. அவற்றைக் கண்டு இன்பம் நுகரும் ஆற்றல் இறந்த நாட்களோடு இறந்தது. சங்க நூல்களிற் பொழிலும் பழன மும் மக்க ளுறைவிடங்களும் பாலையும் நமக்குத் தீட்டப்படும் வகையை உற்று நோக்குவோமாயின், அக்காலத்துப் புலவர் கள் இளமை யுணர்ச்சி நிறைந்தவர்களா யிருந்தார்க ளென்பது நன்கு விளங்கும். சங்கச் செய்யுள்களிற் குறிஞ்சியும் முல்லை யும் நெய்தலும் மருதமும் இன்ப மொழுகுந் தகைடவாய் நம் முன் கொணரப்படுகின்றன. ஆக்கியோன் உளத்திற் கிடந்த வின்பம் பாடலில் வெளிப்பட்டுக் கற்போன் உளத்தில் கூட்டப் படுகின்றது. குறிஞ்சியையும் முல்லையையும் புலவன் இன்பத் தோடு பார்த்திராவிடின் அவை அவனது பாட்டில் இன்பந் தரு வனவாய் நமக்குத் தோன்ற. இன்பத்துடன் இயற்கையை நோக்குதல் இளமையின் தன்மை. தன் உளத்தில் தோன்றிய உணர்ச்சியைத்தான் புலவ னொருவன் தன் செய்யுளைப் படிப் போர் உளத்தில் எழுப்புதல் கூடும். உணர்ச்சியின்றி வெறுங் கல்வித் திறத்தாற் பாடல் செய்வது உயிரற்ற உடலை அழகு செய்வதை யொக்கும். இதுபற்றியே, கல்வியும் முதுமை நுகர்ச்சிகளும் இளமையின் உணர்ச்சிகளைப் பொன்போற் போற்றுவிடின் அவற்றை நீக்கி இளமை பெறுவது சிறந்த தென்று முன் கூற நேர்ந்தது. முன்னோர் செய்த நூல்களி லிருந்து சொற்களை மட்டுங் கற்றுக்கொண்டு, இச் சொற்களைப் புணர்த்தித் தம் புலமை காட்டப் புகுந்ததனாலேயே பிற்காலத்

துப் புலவர் பலருடைய பாடல்கள் சுவையற்றுப் போயின. "காரிகை கற்றுக் கவிதை பாடுவதினும் பேரிகை கொட்டிப் பிழைப்பதுமேல்" என்பதைத் தமிழர் பலர் உணர்ந்திலர். இன்பம் பயக்குஞ் செய்யுள் உளத்திலிருந்து வரவேண்டும். உளத்தை யறிவதற்கு இறந்த நாட்களை ஆராய்மின்; இளமையை விடன்மின். நமது நாட்டிற்கோர் அணிகலமாய் விளங்குகின்ற இரவீந்திரநாத டாகூரின் செய்யுளை யுற்றுநோக்குமின்.

உவில்லியம் உவர்ட்ஸ்வர்த் (William Wordsworth) எனும் ஆங்கிலப் புலவர் தாம் இயற்றிய 'சாவாமையின் உணர்ச்சிகள்' (Intimations of Immortality) என்ற பாடலில், "இளமையில் நாம் இறைவனை அணுகி இருக்கிறோம்; ஆண்டுகள் செல்லச் செல்ல நாம் இறைவனை விட்டு அகல்கின்றோம்" என்று சொல்கின்றார். இது உண்மையன்று என்று யார் சொல்லக் கூடும்?

---

தூத்துக்குடி

# சைவ மங்கையர் மகாநாடு

## பாகம்பிரியாள் மாதர் சங்க 5-வது ஆண்டு நிறைவு விழாவும்

1107 மார்கழி 14-ம் நாள் (29-12-31) செவ்வாய்க்கிழமை மாலை 3-மணிக்குத் தூத்துக்குடி சி. வ. அவர்கள் பாடசாலை மேடையில் பல்லாவரம், பொதுநிலைக் கழக ஆசிரியர் திரு. சுவாமி வேதாசலம் அவர்கள் புதல்வியார் பாளையங்கோட்டை சைவத் திரு. திருவரங்க நீலாம்பிகை அம்மையார் அவர்கள் தலைமையில் சைவ மங்கையர் பொதுக் கூட்டம் கூடியது. அது காலை திருநெல்வேலி, சிந்துபூந்துறை, குலசேகர பட்டினம் முதலிய வெளியூர்ப் பெண்மணிகள் சிலரும் உள்ளூர்ப் பெண்மணிகள் பலருமாகச் சுமார் 300 பெண்மணிகள் கூடியிருந்தார்

மாலை 3-மணிக்கு மா. கி. பெண் பாடசாலை மாணவிகள்

தமிழ்மறை ஓதி அவை தொடங்கப்பெற்றது. பாகம்பிரியாள் மாதர் சங்க அமைச்சர் திருமதி பர்வதத்தம்மாள் அவர்கள் வரவேற்புத் தாள் படித்தார்கள். பின் 3-15 மணி முதல் 4-மணி வரை தலைவி முன்னுரை நடைபெற்றது. பின் 4-4½ மணி வரை குலசை தாயம்மாள் கல்லூரி ஆசிரியை திருமதி. மு. சண்முகசுந்தரத்தம்மாள் அவர்கள் 'மகளிர் அறம்' என்பது பற்றியும், சிந்துபூந்துறை திருமதி. மு. செல்லத்தம்மாள் அவர்கள் 'சைவ மாதர் தற்கால நிலை' என்பது பற்றியும், தூத்துக்குடி திருச்செல்வி சோ. கைலாசம் என்னும் 13 வயதுள்ள மாணவி 'காரைக்கா லம்மையார்' என்பது பற்றியும், தூத்துக்குடி திருச்செல்வி சீதாலட்சுமி என்னும் 11 வயதுள்ள மாணவி 'அப்பூதியடிகள்' என்பது பற்றியும், குலசேகர பட்டினம் திருமதி. வள்ளியம்மை யம்மாள் அவர்கள் 'கௌரி சரித்திரம்' என்னும் பொருள் பற்றியும், தூத்துக்குடி திருமதி. சோ. பிச்சம்மாள் அவர்கள் கடவுள் 'அடியார்க்கெளியர்' என்னும் பொருள் பற்றியும், சங்க அமைச்சர் தூத்துக்குடி திருமதி. சு. பர்வதத்தம்மாள் அவர்கள் 'அன்பும் சிவபக்தியும்' என்னும் பொருள் பற்றியும் மிக அருமையாகவும் விளக்கமாகவும் சொற்பொழிவுகள் நிகழத்தினார்கள்.

அதன் பின்னர் மாலை 7 முதல் 9½ மணி வரை தலைவி முடிவுரையாக 'சைவ மாதர் சைவத்தை வளர்க்கவேண்டும்' என்னும் பொருளைத் தலைப்பாகக் கொண்டு, சைவமாதர் சிறு தெய்வங்களை வணங்கலாகாது, உயிர்ப்பலி விலக்கல், எல்லாம்வல்ல சிவ பெருமானை வழிபடல், சமயக்கல்வி கற்றல், மடாலயம், சைவ மாதர்கள் கையாள வேண்டிய சில சீர்திருத்தங்கள், செல்வ மாதர்களின் நிலை, மேனாட்டு மாதர்கள், அறச் செயல்கள் ஆகிய இவைகளை நன்றாக விளக்கிப் பேசினார்கள். அவையோர்களும் ஒருமனப்பட்டு அமைதியாயிருந்து கேட்டார்கள். இதனாலேயே தலைவி முன்னுரை இனிய குரலிலும் கேட்டார்ப் பிணிக்குந் தகையதாயும் அமைந்திருந்ததென்பது சொல்லாமலே விளங்கும். பின்னால் தேவாரம் ஓதிச் சபை கலைந்தது.

# திருவிசைப்பா வுடையார் துவாதச மாலை

[ஸ்ரீகாழி. ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை அவர்கள்]

## அவதாரிகை

திருமாளிகைத்தேவர் முதலிய ஒன்பதின்மரும் அருளிச் செய்த திருவிசைப்பாவும், அவருட் சேந்தனார் அருளிச்செய்த திருப்பல்லாண்டும் ஒன்பதாந் திருமுறையாக, அபய குலசேகர சோழவரசர் வேண்டிடத் திருநாரையூர் நம்பியாண்டார் நம்பி வகுத்தருளினர் (திருமுறை கண்ட புராணம் உ௬). திருவிசைப் பா—அழகிய இசைபொருந்திய பாக்களை யுடையது என அன் மொழித் தொகையாய்த் திருமுறைக்குக் காரணக் குறிப்பா யிற்று. திருப்பல்லாண்டு—இஃது இறை முதற் கடவுளான பரமசிவனைப் பல்லாண்டு வாழ்கவென அன்பிற் பாட்டருளிச் செய்தலின், பல்லாண்டென் றாயிற்று; பல ஆண்டு பயத்தலைச் செய்வதியாது அது பல்லாண்டென அன்மொழித் தொகை யாய்த் திருமுறைக்குக் காரணக் குறியாயிற்று. இத் திரு முறையை ஆக்கியோரது பெரும்புகழைப் பன்னிரண்டு செய் யுட்களாற் கூறத்தொடங்கி, முதற்கண் நின்ற செய்யுள் இத் திருவிசைப்பா வுடையார் திருநாமங் கூறுவது:—

செம்பொன்மணி யம்பலத்து நிருத்த னார்க்குத்
திருவிசைப்பா வுரைத்தவர்தந் திருப்பேர் சொல்லிற்
பம்புபுகழ் செறிதிருமா ளிகைமெய்த் தேவர்
பரிவுடைய சேந்தனார் கருவூர்த் தேவர்
நம்பிகா டவர்கோனற் கண்டரா தித்தர்
நன்குயர்வே ணாட்டடிகள் திருவாலி யமுத
ரம்புவியோர் புகழ்புருடோத் தமர்சேதி ராயர்
ஆகவிவ ரொன்பதின்மர் தாமுறைகண் டடைவே.

(இதன் பொருள்) நிருத்தனார்க்குத் திருவிசைப்பா உரைத் தவர் திருமாளிகைத்தேவர் முதலிய ஒன்பதின்மர் (என்றவாறு)

[திருநாமவடைவு முன்னர்க் காண்க. (௫)] (க)

இரண்டாவது செய்யுள் திருப்பதிகத் தொகை கூறுவது :

அடைவுறுமா ளிகைத்தேவர் நான்கு சேந்த
ரன்புறுபல் லாண்டொன்றே டிசைப்பா மூன்று
திடமுடைய கருவூரற் பத்து வீறிற்
சிறந்தகா டவரிரண்டு கண்டர்வே ணாடர்
படிபுகழொரவ வொன்றுதிரு வாலி நான்கு
பன்னுபுரு டோத்தமனு ரிரண்டு சேதிராய
ருடையதிருக் கடைக்காப்பொன் றுகவிரு பத்தொன்
பானேது செய்யுள்முந்நூற் றறுபதினே டைந்தே.

(இ-ள்.) திருமாளிகைத் தேவர் முதலியோர் இத்துணைப் பதிகங்களாக, இருபத்தொன்பது பதிகங்கள் முந்நூற் றறுபத்தைந்து பாக்களை யுடையனவாகப் பாடியருளினர் (எ-று.)

[இவ்விவரம் முன்னர்க் காண்க (ந)] (உ)

மூன்றாவது செய்யுள் திருப்பதிகங்களின் பண்ணடைவு கூறுவது:—

ஐந்துடனுல் வருமுறைத்த திருக்கடைக்காப் பிற்பண்
ணறையின்மா ளிகைத்தேவர் நான்கினென்று காந்தாரம்
முந்துகரு வூரர்பத்தி னிரண்டுபுற நீர்மை
மொழிந்திடுகாந் தாரமொன்று காடவர்கோ னிரண்டி
னந்தலில்சா ளரபாணி யொன்றுவேணாட் டடிக
ணவின்றதொன்று புறநீர்மை திருவாலி யமுதர்
பந்தமறச் சொன்னான்கி னொன்றுநட்ட ராகம்
பகர்ந்திடினென் றிந்தளமற் றெவையும்பஞ் சமமே.

(இ - ள்.) திருமாளிகைத் தேவராதியோர் திருப்பதிகங்களின் பண் இன்னவை (எ-று.)

## க. திருமாளிகைத் தேவர்

| பதிகம். | தலம். | முதற்குறிப்பு. | பண். | செய்யுள் |
|---|---|---|---|---|
| 1. | கோயில் | ஒளிவளர் விளக்கே | பஞ்சமம் | கக |
| 2. | ,, | உயர் கொடியாடை | ,, | கக |
| 3. | ,, | உறவாகிய யோகம் | ,, | கஉ |
| 4. | ,, | இணங்கிலா வீசன் | காந்தாரம் | கக |

ஆகப் பதிகம் 4-க்குச் செய்யுள் சரு.

## 2. சேந்தனார்

| | | | |
|---|---|---|---|
| 1. | கோயில்—(திருப்பல்லாண்டு) மன்னுக | பஞ்சமம் | ௧௩ |
| 2. | திருவீழிமிழலை—ஏகநாயகனை | ,, | ௧௨ |
| 3. | திருவாவடுதுறை—பொய்யாத | ,, | ௧௧ |
| 4. | திருவிடைக்கழி—மாலுலாமனம் | ,, | ௧௧ |

ஆகப் பதிகம் 4-க்குச் செய்யுள் ௪எ

## 3. கருவூர்த் தேவர்

| | | | |
|---|---|---|---|
| 1. | கோயில் — கணம்விரி — | புறநீர்மை | ௧௧ |
| 2. | திருக்களந்தை யாதித்தேச்சரம்—கலைகள்— | ,, | ௧0 |
| 3. | திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம்-தளிரொளி- | பஞ்சமம் | ௧௧ |
| 4. | திருமுகத்தலை—புவனநாயகன் — | ,, | ௧0 |
| 5. | திரைலோக்கிய சுந்தரம்—நீரோங்கி — | காந்தாரம் | ௧௧ |
| 6. | கங்கைகொண்ட சோளேச்சரம்-அன்னம்- | பஞ்சமம் | ௧௧ |
| 7. | திருப்பூவணம் — திருவருள் — | ,, | ௧0 |
| 8. | திருச்சாட்டியக்குடி — பெரியவா — | ,, | ௧0 |
| 9. | தஞ்சையிராசராசேச்சரம்-உலகெலாம் — | ,, | ௧௧ |
| 10. | திருவிடை மருதூர் — வெய்யசெஞ்சோதி— | ,, | ௧0 |

ஆகப் பதிகம் 10-க்குச் செய்யுள் ௱௩

## 4. பூந்துருத்தி நம்பி காடநம்பி

| | | | |
|---|---|---|---|
| 1. | திருவாரூர் கைக்குவான் | பஞ்சமம் | ௨ |
| 2. | கோயில் முத்து வயிரமணி | சாளரபாணி | ௧0 |

ஆகப் பதிகம் 2-க்குச் செய்யுள் ௧௨

## 5. கண்டராதித்தர்

| | | | |
|---|---|---|---|
| 1. | கோயில் மின்னார் | பஞ்சமம் | ௧0 |

ஆகப் பதிகம் 1-க்குச் செய்யுள் ௧0

## 6. வேணாட்டடிகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | கோயில் துச்சான செய்திடினும் | புறநீர்மை | ௧0 |

ஆகப் பதிகம் 1-க்குச் செய்யுள் ௧0

## 7. திருவாலியமுதனார்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | கோயில் | பாதாதிகேசம் | பஞ்சமம் | கக |
| 2. | ,, | பவளமால்வரை | நட்டராகம் | கக |
| 3. | ,, | அல்லாய்ப் பகலாய் | இந்தளம் | கக |
| 4. | ,, | கோலமலர் | பஞ்சமம் | கம |

ஆகப் பதிகம் 4-க்குச் செய்யுள் சஉ

## 8. புருடோத்தம நம்பி

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | கோயில் | வாரணி | பஞ்சமம் | கக |
| 2. | ,, | வானவர்கள் | ,, | கக |

ஆகப் பதிகம் 2-க்குச் செய்யுள் உஉ

## 9. சேதிராயர்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | கோயில் | சேலுலாம் | பஞ்சமம் | கம |

ஆகப் பதிகம் 1-க்குச் செய்யுள் கம

ஆக மொத்தம் திருவிசைப்பா திருப்பதிகம் 28; திருப்பல்லாண்டு திருப்பதிகம் 1. ஆகப் பதிகம் 29-க்கும் இப்போது உள்ள செய்யுள் 303, காணுமற் போனவை 62. ஆக 365 (3).

நான்காவது செய்யுளிற் போற்றப்படுவார்

## 1. திருமாளிகைத் தேவர்

*பஞ்சமம்பூ வைபயிலுந் துறைசை வேந்தர்*
*பயில்மறையோர் மாளிகையார் போக நாதர்*
*வெஞ்சமந்தீ ராகமங்க ளுணர்த்த ஞான*
*வேதியராய்ச் சித்தமடந் தாபித் தானை*
*யெஞ்சலிலா முகனருளா லிறந்தா னுய்ய*
*விடர்விலகிச் சிவனையருச் சித்து மாதர்க்*
*கஞ்சுதரு மகவருளி யரசற் சீறி*
*யமர்தில்லை யரற்பாடி யமர்ந்திட் டாரே.*

(இ - ள்.) பஞ்சமம் என்னும் பண்ணை நாகணவாய்ப் பறவை பாடும் திருவாவடுதுறையில் பிராமண குலத்தில் திருவவதரித்த திருமாளிகைத் தேவர் போகநாதரிடம் சிவாகமப்

பொருளைக் கேட்டுணர்ந்து ஞானசித்தி பெற்று அக்கோகழி நகரத்தில் சித்த மடத்தைத் தாபித்து, விநாயகப் பெருமானது அருளால் இறந்த பிணத்தை உயிர்பெறச் செய்து, சிவபெருமானை உள்ளன்போடு அருச்சித்து, மலடிகளாக விருந்த உத்தமிகளுக்கு அழகிய ஆண்மகவு பிறக்கக் கருணை புரிந்து, தமது ஆற்றலை யறியாது தம்மை ஒறுக்கக் கருதிய அரசனை ஒறுத்துப் பின்னர் அவ் வேந்தனுக்கு அநுக்கிரகஞ் செய்து, திருத்தில்லைக்குச் சென்று ஆனந்தத் தாண்டவ பூஷணரைத் திருப்பதிகங்களாற் றுதித்து, சிவாநந்நிய சாக்ஷாத்கார நிஷ்டையடைந்தார் (எ-று).

புராண சாரம்:—

திருமாளிகைத் தேவர் திருவாவடுதுறையிற் பிராமண குலத்தி லுதித்து, போகநாதராற் போதி விருக்ஷத்தினடியிற் சிவதீக்ஷை செய்விக்கப்பெற்று, வேதாகமங்களை யோதியுணர்ந்து உண்மை ஞானம் பெற்றார். பிறகு தமது ஞானசாரியார் கட்டளைப்படி துறைசை யம்பதியில் சித்தர் மடமொன்றும் சித்தர் பீடமொன்றுஞ் சமைத்து ஆங்கே வதிந்து சைவ சமய பாலனம் புரிந்தார். ஒருநாள் இவர் சிவபூசைக்குத் திருப்பள்ளித்தாமம் கொண்டுவரும் வழியில் பிணத்தைச் சுமந்து வருவாரைப் பார்த்துத் தீட்டுப்படுமே யென் றஞ்சியபோது விநாயகப் பெருமான் கருணையால் அச் சவம் உயிர் பெற்றதைக் கண்டு களிப்போடு சென்று சிவபூசை செய்தார். இவ்வாறு இவர் சிவ வழிபாடு செய்து வருங்கால், இவரது சித்தி வல்லபங்களை யுணர்ந்து மலடிகளாகிய சிலர் இவரைப் பூசித்து அழகிய ஆண்மக்களைப் பெற்றார்கள். இதில் ஐயங்கொண்ட சிலர் சோழ அரசனைக் கொண்டு இவரைச் சிறைப்படுத்த முயன்றனர். அரசன் கட்டளைப்படிச் சென்ற ஏவலாளர் தம்மில் ஒருவனையே பிணித்தும் ஒருவனையே கொன்றும் வந்ததனை அரசன் கண்டு தானே இவரைத் தளையிடப் பெருஞ் சேனையோடு சென்றான். தேவர் ஆலய மதிலி லமைக்கப்பட்ட நந்திகளைக் கொண்டு அரசன் படையைக் கலக்கி வேந்தனையும் பிணித்து

வரச் செய்து பின்னர் அம் மன்னனுக்குப் புத்தி புகட்டி அனுப்பிவிட்டார். அதன் பின்னர்ப் பல தலங்களையும் இவர் தரிசித்துத் திருத்தில்லையை யடைந்து நான்கு திருப்பதிகங்களாற் சிவபெருமானைப் பாடி இறைபணியில் நின்று பேரின்பமெய்தினர். (4)

ஐந்தாவது செய்யுளிற் போற்றப்படுவார்

## 2. சேந்தனர்

இட்டளந்தீ ரிடைக்கழியில் வேளாண் செல்வர்
 எழிற்குலத்துச் சேந்தனர் வெண்கா டர்தங்
கட்டளையி னின்றதிற லறியாச் சோழன்
 கட்டியவெந் தளைநீங்கித் தில்லை மேவி
யுட்டளையாற் பல்லாண்டு பாடித் தேரை
 யுய்த்தருளிக் களியருத்தி மிழலை வாழ்த்திப்
பட்டிறை யிடைக்கழிகோ முத்தி பாடிப்
 பாவலர்வாழ் தில்லைநா வலருற்றரே.

(இ - ள்.) ஆத்தும பந்தங்களை நீக்கும் திருவிடைக்கழியில் வேளாளர் மரபிலே திருவுதயஞ் செய்த சேந்தனர் திருவெண்காடரது ஆணைப்படி அவரது திரவியத்தை அடியார்களுக்குக் கொடுத்துதவ, அவ் வுண்மையை யறியாத அரசனற் றளையிடப்பட்டு, அத் தளையை விநாயகப் பெருமானருளால் விடுப்பித்துக்கொண்டு, சிதம்பரத்தில் வாசஞ் செய்து திருப்பல்லாண்டு பாடி நடராஜப்பெருமான் திருத்தேரை நடத்தி, கூத்தப் பிரானுக்குத் திருக்களி யமுதம் அருத்தி, வீழிமிழலை கோமுத்திபுரம் இடைக்கழி இவற்றைப்பாடித் திருத்தில்லையில் திவ்விய தேசோமயானந்தத்தைப் பெற்றர். (எ-று.)

புராண சாரம்:—

சேந்தனர் திருவிடைக்கழியில் வேளாளர் மரபில் தோன்றினர். (திருவீழிமிழலையில் அந்தணர் மரபிற் பிறந்தவர் என்றும் பெரியோர் கூறுவர்). இவர் காவிரிப்பூம்பட்டினத்தில் திருவெண்காடருக்கு அமைச்சராக விருந்து, அவர் துறவெய்

திய பின்னர் அவர் திரவியங்களை யெல்லாம் சிவனடியார்களுக்கு அவர் கட்டளைப்படி வழங்கினார். இவ் வுண்மையை யறியாத வேந்தன் இவரை நாங்கூரிற் சிறை செய்வித்தான். இதனை யுணர்ந்த பட்டினத்தடிகள் சிவபெருமானை வேண்ட அப் பெருமான் கணபதியைக் கொண்டு சேந்தனாரைச் சிறை வீடு செய்தார். பிறகு சேந்தனார் தமது மனைவி மக்களோடு சிதம்பரஞ் சென்று அங்கே விறகு வெட்டி ஜீவனஞ் செய்து வந்தும் சிவபிரானிடத்திடையறாத பேரன்பு செலுத்தி வந்தார். பின்னர் வீழிமிழலை, ஆவடுதுறை, இடைக்கழி என்னுந் தலங்களுக்குச் சென்று திருப்பதிகம் பாடி மீண்டுந் தில்லையை யடைந்து மார்கழி மாதத்துத் திருத்தேர் நிலைபெயரா திருந்தது கண்டு திருப்பல்லாண்டு பாடி அத்தேர் நிலைபெயர்ந்து ஓடி நிலைநிற்கும்படிச் செய்தருளினார். மறுநாள் திருவாதிரை தினத்து மெய்யன் பினை யுடைய சேந்தனார் அன்பால் விரிந்த மனத்தோடு விரிந்த வஸ்திரத்தினின்று பக்குவமாய் மலர்ந்த களியமுதை யவிழ்த்து நிவேதிக்க அது விரிந்த சடையையுடைய சிவபெருமான் உண்டருளுதற்கு இனிய அமிர்தாயிற்று (களிறு 53). இவ்வமுதை யுண்டருளிய நடராஜப் பெருமான் எஞ்சிய வமுதை யவ்வாடையோடு பொன்மன்றத்து வைத்திருந்ததை மறுநாட்காலை காப்பவிழ்த்த அந்தணர் கண்டு ஆச்சரியப்பட ஆகாயவாணியால் இவ்வமுதின் பெருமையை யறிந்தார். இதனை யுணர்ந்த பெரியோர் சேந்தனாரைத் தேடிக் கண்டு தரிசித்து வணங்கினார். சேந்தனாரும் தமது மனைவி மக்களோடு பரமசிவனது திருவடி நீழலை யடைந்து நித்தியானந்தப் பெருவாழ்வை யுடையவராயினார். (5)

(தொடரும்.)

## காலஞ்சென்ற உயர்திரு. பா. வே. மாணிக்க நாயக்கரவர்கள்



சேலம் செய்த தவப்பயனால் வேளாண் குடி விளங்க, சைவத் துறை சிறக்க, தமிழன்னை மனங் களிக்க, 1871-ம் ஆண்டு பிப்ரவரி மீ 25உ பிறந்து, இலக்கியம், இலக்கணம், ஆராய்ச்சி, அறிவு விளக்கம் என்ற பல துறைகளிலும் ஆங்கிலத்திலும் தமிழிலும் நனி தேர்ந்து, சென்னை யரசாங்கத்தில் சூப்பெரிண்டெண்டிங் என்ஜினியராகவிருந்து பெரும் புகழ் படைத்துப் பின்னர் உம்பளம் பெற்று மிளிர்ந்து வந்த நமது சிவபுரம் ஜமீன்தார், உண்மை ஞானியார், ஒப்புயர்வற்ற ஆராய்ச்சியாளர், பகையஞ்சா வீரப் புலவர், தமிழன்னையின் தவப்புதல்வர், எந்நாட்டினரும் மணியெனப் போற்றும் பேரறிவாளர், உயர் திரு. பா. வே. மாணிக்க நாயக்கரவர்கள் தமது 60-வது வயதில் சென்ற டிஸம்பர் மீ 25உ இரவு திருவாதிரை நாளில் எல்லாம் வல்ல இறைவனடி நீழல் நண்ணியது கேட்டு உளந் திடுக்கிட்டுக் கழிபெருந்துய ரெய்துகிறோம். அன்னார் தம் செல்வக் குழந்தைகட்கும், அரும்பெறற்சுற்றத்தார்க்கும் எமது அநுதாபம் உரித்தாகுக. அச் சைவப்பெரியார்

"இறுமாந் திருப்பர் கொலோ ஈசன் பல்கணத் தெண்ணப் பட்டுச்
சிறுமா னேந்திதன் சேவடிக் கீழ்சென்று இறுமாந் திருப்பர் கொ
[லோ"

---

## காலஞ்சென்ற திரு. இ. வை. அனந்த ராமையரவர்கள்

சென்னை யரசாங்கக் கல்லூரித் தமிழாசிரியராக விருந்து பின்னர் திராவிட மொழி யாராய்ச்சிச் சங்கத்தில் தமிழ்த்தொண்டாற்றி வந்தவரும், கலித்தொகை, களவழி நாற்பது முதலிய சங்க இலக்கியங்களுக்கு ஆராய்ச்சிக் குறிப்புகள் எழுதி அவைகளைத் திருந்திய முறையில் வெளியிட் டுதவியவருமாகிய, பண்டிதர் திரு. இ. வை. அனந்தராமையர் அவர்கள் காலஞ் சென்றது தமிழன்னையின் தவக் குறையே யாகும். அன்னார்தங் குடும்பத்திற்கும் எமது அநுதாபம் உரியதாகுக.

# கரந்தைத் தமிழ்ச் சங்கம் தஞ்சாவூர்

## திரு. பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள் காலஞ்சென்றது பற்றி ஒரு இரங்கற் கூட்டம்

1932-ஜனவரி மீ 3உ (பிரசோற்பத்தி, மார்கழி சகூ) ஞாயிறு மாலை 3-மணிக்குத் திரு. T. P. K. அழகர்சாமி பிள்ளை அவர்கள் தலைமையில் இச்சங்கத்தே ஒரு பொதுக்கூட்டம் ஒன்று கூடியது. அப்போது, காலஞ்சென்ற மாணிக்க நாயக்கர் அவர்களது ஒப்புயர்வற்ற பன்மொழிப் புலமையினையும், தமிழாராய்ச்சியினையும், பிற திறமைகளையும், அன்னாரது உள்ளம் நிறைந்துயர்ந்த உண்மைத் தமிழன்பினையும், அன்னார் இச்சங்கத்திற்கு ஆயுள் உறுப்பினராகி இச்சங்கத்தின் கண்ணாகி விளங்கியதையும், இச்சங்கத்திற்குப் புரிந்த பற்பல அருட்செயல்களையும் அவர்களது உரிமை அன்பர்களாகிய சங்க அன்பர்கள் பலரும் எடுத்துக் கூறித் துயர்க்கடலில் ஆழ்ந்தனர். யாவரும் எழுந்து நிற்க, கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக ஒப்புக் கொள்ளப்பட்டன.

(1) திரு நாயக்கரவர்கள் நல்லுயிர் எல்லாம் வல்ல இறைவன் தண்ணடி நீழலில் அமைதியுற்றிருக்க இச்சங்கம் இறைவனடியை எண்ணி இறைஞ்சுகின்றது.

(2) திரு நாயக்கரவர்கள் குடும்பத்தினருக்கு இச்சங்கம் தன்மனமார்ந்த துயரினைக் கூறி அவர்கள் ஆறுதல் குறித்து இறைவனடியை எண்ணி இறைஞ்சு கின்றது.

(3) திரு நாயக்கரவர்கள் அரும்பெறல் ஆராய்ச்சிகளை யெல்லாம் தமிழுலகம் அறிந்து பயனுறுமாறு செய்து நாயக்கரவர்கள் புகழுடம்பினை நிலைநாட்ட இச்சங்கம் எண்ணி யிருப்பதால், அவர்தம் ஆராய்ச்சிக் குறிப்புக்களை யெல்லாம் இச்சங்கத்திற்கு உதவியருள திரு நாயக்கரவர்கள் குடும்பத்தினரை இச்சங்கம் வேண்டிக்கொள்ளுகின்றது.